தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

₹ 10/- மலர் 14 இதழ் 10 பிப்ரவரி 2013 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மக்கள் நலம் நாடும் அரசின் மகத்தான திட்டம்!

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மலிவு விலை சிற்றுண்டி உணவகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்

முற்றக் கச்சேரி
புதிய பகுதி

64வது
இந்திய குடியரசு தின விழா!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள்

திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தைப்பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய நீங்கள், குடியரசு தினமான ஜனவரி 26 அன்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்திலும் கலந்து கொண்டிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். கிராமங்களும் வேளாண்மையும் செழித்தால் தான் நாடு சிறக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. கிராமங்களின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டும் தினமாக கிராம சபா திகழ்கிறது. வீட்டை சிறப்பாக நிர்வாகம் செய்யும் பெண்களால்தான் நாட்டையும் சிறப்பாக நிர்வாகம் செய்ய முடியும் என்பதற்கு உதாரணம் கிராம சபாவில் மகளிரின் பங்களிப்புதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். கிராம சபாவில் கலந்து கொண்டு தங்கள் கிராமத்திற்கு தேவையான வசதிகளை பெற சுய உதவிக் குழுவினர் குரல் கொடுப்பதுடன், சமூக நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் நடவடிக்கைகளையும் இத்தினத்தில் மேற்கொள்ள முன் வரவேண்டும்.

நமது உரிமைகளைப் பெறுவதற்கு நாம் அமைதியான முறையில் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அன்னியரை அகற்ற தேசப்பிதா காந்தியடிகள் மேற்கொண்ட போராட்ட முறையான அகிம்சை வழியினை சுய உதவிக் குழுவினர் மேற்கொள்வது அவர்களின் போராட்டத்திற்கு வெற்றியை தருவதுடன், மற்றவர்களுக்கு வழிகாட்டாகவும் அமையும். இப்போராட்டமுறை பார்ப்பதற்கு சாதாரணமாக தெரிந்தாலும், இதன் வலிமை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தையே அகற்றியது என்பதை அனைவரும் அறிவார்கள்.

சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு மகளிரின் ஒற்றுமையை பலப்படுத்தவும், அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற நோக்குடனும் ஆண்டுதோறும் நடத்தப்படும் கலாச்சாரப் போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் தன்னம்பிக்கையும், ஒற்றுமை உணர்வும் வளர்ந்துள்ளது என்று சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் கூறுவதைக் கேட்கும்போது எனக்கு பெருமிதமும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. இந்தப் போட்டிகள் உங்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக மட்டுமல்ல, அடுப்பூதும் பெண்களாலும் சாதனைகள் படைக்க முடியும் என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காகவும் தான் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதே ஒற்றுமை உணர்வோடும், தன்னம்பிக்கையுடனும் மகளிருக்கும் குழந்தைகளுக்கும் எதிராக நடக்கும் அநீதிகளை களைய நீங்கள் முன்வருவதுடன் உங்கள் பிள்ளைகளுக்கும் தங்களின் பாதுகாப்பு குறித்த பயிற்சிகளை வழங்க வேண்டும். ‘பெண்கள் வெறும் பொம்மைகள் அல்ல’ என்பதை அனைவருக்கும் உணர்த்தும் கருவியாக நமது ஒற்றுமை திகழ வேண்டும் என்பதற்கு இத்தகைய கலாச்சாரப் போட்டிகள் ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வறுமை ஒழித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு துவக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 15 மாவட்டங்களில் வெற்றிகரமாக செயல்பட்டு வருவது உங்களுக்குத் தெரியும். வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மக்களை அடையாளம் கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுக்களாக இணைத்து, அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றம் பெறச் செய்ய வேண்டும் என்ற இந்த இயக்கத்தின் நோக்கங்கள் வெற்றி பெற உங்களின் பங்களிப்பும் தேவை. இத்திட்டத்திற்கான தகவல் தொடர்பு செயல்பாடுகளை பல்வேறு நிலைகளில் செயல்படுத்துதல், மக்களின் பங்கேற்புடன் நடைபெறும் மக்கள் நிலை ஆய்வு, கிராம வளர்ச்சித் திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளில் சுய உதவிக் குழுவினரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினரும் ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். உங்களின் ஈடுபாடுதான் இந்த இயக்கத்திற்கு கிடைக்கும் வெற்றி என்பதை மீண்டும் ஒருமுறைக் கூறிக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்

ஒற்றுமை உணர்வோடும், தன்னம்பிக்கையுடனும் மகளிருக்கும் குழந்தைகளுக்கும் எதிராக நடக்கும் அநீதிகளை களைய நீங்கள் முன்வருவதுடன் உங்கள் பிள்ளைகளுக்கும் தங்களின் பாதுகாப்பு குறித்த பயிற்சிகளை வழங்க வேண்டும்.

கடிதங்கள்

மாற்றுத் திறனாளிகளுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் செய்திகள், பெண்களுக்கான உடல் நலக் குறிப்புகள், அனைவரும் ஒன்றிணைந்தால் ஏற்படும் நன்மைகள் குறித்த கட்டுரைகள், சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் என நன்மை தரும் அனைத்து செய்திகளையும் தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

என். மல்லிகா,
குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு,
வி. காளியாபுரம், கோவை மாவட்டம்.

அறியாமையால் அடங்கி கிடக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை அளித்து, சுய உதவிக் குழுவாக செயல்பட்டு வெற்றி பெறுபவர்களை பாராட்டி வெற்றிக் கதைகளையும், சுய உதவிக் குழுவினருக்கும் பிறருக்கும் பயனளிக்கும் வகையிலான பல்வேறு செய்திகளையும் மாதந்தோறும் தாங்கி வரும் முற்றம் இதழ் மேலும் மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

எஸ். கோகில செல்வம்,
ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு,
என். மேட்டுப்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் வழங்கப்படும்பல்வேறுதொழிற்பயிற்சிகளைப்பெற்று,வாழ்வில்வளம் பெற்றுவரும்ஏழைமக்களின்வெற்றிக்கதைகளையும்,கூட்டமைப்புகள், தொழில் குழுக்கள் போன்றவற்றின் செயல்பாடுகளையும் வெளியிட்டு, வாழ்வில் முன்னேற்றம் பெறத் துடிப்பவர்களுக்கு தன்னம்பிக்கையை தரும் இதழாக முற்றம் திகழ்கிறது.

கற்பகம் நெடுஞ்செழியன்,
தாமரை மகளிர் குழு,
மேட்டுத் தெரு,
சேலம் மாவட்டம்.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

இப்படிக்கு

உள்ளே...

பிப்ரவரி 24 பிறந்த நாள்... பக்கம்...4

முற்றக் கச்சேரி... (புதிய பகுதி) பக்கம்...8

பயனுள்ள அழகுக் குறிப்புகள் பக்கம்...11



தேசிய அறிவியல் தினம்... பக்கம்...13

காது, மூக்கு, தொண்டை பாதுகாப்பு பக்கம்...22

உட்புற காற்று மாசுபடுதல்... பக்கம்...32

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnaduwomen.net/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 14 இதழ் 10 பிப்ரவரி 2013 விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
பெ. அமுதா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
ஜி. லதா, இ.ஆ.ப.,
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்
ஆர். ராஜஸ்ரீ
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

சாதனை பெண்...

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆட்டோ ரிக்ஷா ஓட்டும் தொழிலாளியின் மகள் பிரேமா, கடினமான படிப்பு என்று சொல்லக் கூடிய சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் இந்தியா விலேயே முதலிடத்தைப் பெற்று இன்று அனைவரின் பாராட்டையும் பெற்றிருக்கிறார். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இதைவிட வேறு சான்று எதுவுமே இருக்க முடியாது. இவ்வாறு வெற்றிவாகை சூடிய இந்த மாணவிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் பத்து இலட்சம் வழங்கி பாராட்டியுள்ளார். அதோடு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பாராட்டுகளும் பரிசுகளும் பிரேமாவிற்கு குவிந்த வண்ணம் உள்ளன. ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த பெண் பிரேமா சாதித்த இந்த சாதனைக்கு முற்றம் தன் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

புத்தாண்டு, பொங்கல் ஆகிய கொண்டாட்டங்கள் முடிந்து மாணவர்கள் அனைவரும் ஆண்டு தேர்வுக்கு தயார் செய்ய தொடங்கியிருப்பார்கள். குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து விட்ட இக்காலத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் மிக கவனமுடனும், பக்குவத்துடனும் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. தினக்கூலி வாங்கும் தொழிலாளி கூட செலவு பற்றி கவலைப்படாமல் தனது பிள்ளைகள் சிறந்த ஆங்கிலப் பள்ளிகளில் சேர்ந்து படித்து உயர்வான பதவிக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்று.

மாணவர்கள் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சாதனை படைத்த பிரேமா கூறியவற்றை அனைத்து பெற்றோர்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனது வெற்றிக்கு என் தந்தை கொடுத்த உற்சாகம்தான் முக்கிய காரணம் என்கிறார் பிரேமா. குழந்தைகள் தேர்வு எழுத தயாராகும் இந்த நேரத்தில் அவர்களோடு இருந்து அவர்களுக்கு நேர்மறையான வார்த்தைகளைக் கூறி, உற்சாகமூட்டி அவர்களால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குவதோடு, அவர்கள் படிப்பதற்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். தொலைக்காட்சி, விருந்தினர் வருகை, கொண்டாட்டங்கள், நண்பர்களின் வரவு ஆகியவைகளை கூடிய வரை தவிர்த்து விடுவதும், குறைத்துக் கொள்வதும் நல்லது. பிள்ளைகளை படிக்கச் சொல்லி நச்சரிப்பது, முணுமுணுப்பது, அடிக்கடி அறிவுரைகளை கூறுவது, எதிர்மறையான பேச்சுக்களை பேசுவது ஆகியவைகளை தவிர்க்கவும். இவையாவும் பிள்ளைகளை தேர்வுக்கு தயார் செய்வதற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளாகும்.

இம்மாதத்தில் அறிவியல் நாள் அனுசரிக்கப்படுகிறது. அறிவியல் கண்டுபிடிப்பால் இன்று கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க முடியாத அதிசயங்களை இந்த மனித குலம் இதுவரை பெற்றிருக்கிறது. இனியும் எதிர்காலங்களில் என்னவெல்லம் நடக்க இருக்கின்றதோ என்ற வியப்பும் மேலோங்கி நிற்கிறது. இந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித குலத்திற்கு பெரிய அளவில் நன்மை செய்தாலும் அறிவியலை நமது அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்வது நல்லது. அளவிற்கு அதிகமாக அவசியம் இல்லாத செயல்களுக்கு பயன்படுத்த முற்படுவது மனித குலத்திற்கே பேராபத்தாக முடியும். அறிவியல் வளர்ச்சியால் இயற்கையும் மனித நேயமும் அழிந்து விடாமல் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அனைவரின் கடமையாகும்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

ஒற்றுமை உணர்வினை வளர்க்கும் கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கு இடையே ஒற்றுமையை பலப்படுத்தவும், அவர்களிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கவும் ஆண்டுதோறும் கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய போட்டிகள் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடம் நல்ல வரவேற்பையும், ஒற்றுமையையும், அவர்களிடையே அதிக ஆர்வத்தையும் ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் மூலம் இந்த கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பட்டிமன்றம், பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, குழுப்பாட்டு, குழு நடனம் மற்றும் கோலப் போட்டி ஆகியவற்றில் ஏதேனும் நான்கினை தேர்ந்தெடுத்து அவற்றில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். சமுதாய விழிப்புணர்வு, மகளிர் மேம்பாடு, சுகாதாரம், சுற்றுச்சூழல், பிளாஸ்டிக் ஒழிப்பு, குழந்தை திருமணத்தைத் தடுத்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் இப்போட்டிகள் மகளிர் கல்லூரிகள், பள்ளிகள், தொழில்நுட்ப பயிலகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் நடத்தப்படுகிறது.

கலாச்சாரப் போட்டிகளில் முதற்கட்டமாக நடைபெறும் வட்டார அளவிலான போட்டிகளில் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும். வட்டார அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற கூட்டமைப்புகள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதியினை பெறுகின்றன. மாவட்ட அளவிலான கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்ற குழுக் கூட்டமைப்புகளுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் ரொக்கப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். தற்போது அனைத்து மாவட்டங்களிலும் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டு அவைகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. ■

> சமுதாய விழிப்புணர்வு, மகளிர் மேம்பாடு, சுகாதாரம், சுற்றுச்சூழல், பிளாஸ்டிக் ஒழிப்பு, குழந்தை திருமணத்தை தடுத்தல் போன்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் கலாச்சாரப் போட்டிகளில் சுய உதவிக் குழுவினர் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் மூலம் கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள்

ஏழை மக்களின் துயர் துடைத்திடவும், அவர்கள் பொருளாதார வளர்ச்சி பெறவும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தி வருகிறார்.

பிறந்த நாள்

பிப்ரவரி 24

பெண்களை துச்சமென நடத்தியவர்கள் மத்தியில், பல்வேறு சிறப்புகளைப் பெற்று பீடு நடைபோட்டு வருபவர் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள். மக்களின் துயர் துடைத்திடவும், அவர்தம் வாழ்வு சிறக்கவும் பல்வேறு திட்டங்களை தீட்டி அவற்றை முறையாகச் செயல்படுத்தி வருபவர். முன்னாள் முதலமைச்சர் அமரர் எம் ஜி ஆர். அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24.02.1948ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் திரு ஜெயராமன் அவர்கள், தாயார் திருமதி சந்தியா ஜெயராமன். முதலில் பெங்களூர் பிஷப் கார்டன் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர் சென்னை பிரசன்டேஷன் கான்வென்ட் சர்ச் பார்க் பள்ளியிலும் கல்வி பயின்றார். நான்கு வயது முதல் பரத நாட்டியத் திலும், கர்நாடக இசையிலும் பயிற்சி பெற்றவர். மோகினி ஆட்டம், கதக், மணிபுரி ஆகிய நாட்டியங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். பரத நாட்டியக் கலையில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று இந்தியா முழுவதிலும் நூற்றுக்கணக்கான பரதநாட்டிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

ஆங்கிலம், தமிழ். தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வல்லுநர். அத்துடன் மலையாள மொழியையும் நன்கு புரிந்து கொள்ளும் திறன் படைத்தவர். ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் இவர் எழுதியுள்ள பல கட்டுரைகள் பல்வேறு பத்திரிக்கைகளில்

வெளியாகியுள்ளன. தமிழில் நான்கு முழுநீள நாவல்களும், பல சிறு கதைகளும் எழுதியுள்ளார். அமெரிக்க ஐக்கிய நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங், தாய்லாந்து, ஜப்பான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு சென்று வந்துள்ளார்.

இவர் 1984 முதல் 1989 வரை மாநிலங்களவை உறுப்பினராக மக்களுக்காக பணியாற்றியுள்ளார். இவர் தென்னிந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர் என்பதால், மாநிலங்களவையில் தமிழக மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி உரையாற்றியுள்ளார். மாநிலங்களவையில் இவரது கன்னிப் பேச்சை மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார். 1989ஆம் ஆண்டு தமிழக சட்ட மன்றத்தில் எதிர்கட்சித் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

1991ஆம் ஆண்டு முதன் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பதவி வகித்தார். பின்பு 2001ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றார். தற்போது 2011ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோதெல்லாம் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதில் குறிப்பாக முற்றிலும் மகளிரால் இயக்கப்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், பெண்களுக்கென அதிரடிப்படை பிரிவு (Commandos) உருவாக்கியது, தொட்டில் குழந்தைகள் திட்டம் ஆகியவை முதலமைச்சர் அவர்களின் சாதனைகளில் சிலவாகும். ■

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுவரை பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார். அவற்றில் சில

1972 – கலைமாமணி விருது – தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.
1991 – சென்னை பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம்
1993 – மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம்
2003 – பாரதிதாசன் பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம்
2005 – டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் சார்பில் சட்டத்தில் டாக்டர் பட்டம்
உக்ரைன் நாட்டிலிருந்து அகில உலக மனித உரிமைகள் கழகத்தின் சார்பில் தங்கத் தாரகை விருது
அரிமா சங்கம் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது.
இத்தகைய சிறப்புகள் பல பெற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த தினம் பிப்ரவரி 24 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மகளிர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களில் சில

1. தொட்டில் குழந்தைகள் திட்டம்,
2. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
3. இந்தியாவிலேயே முதன் முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்
4. அனைத்து மகளிர் அதிரடிப் படை
5. அனைத்து மகளிர் காவல் படை
6. தாயின் முதலெழுத்தை குழந்தையின் தலைப்பெழுத்தாக பயன்படுத்துதல்
7. மகளிருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ‘குடிமகள்’ என்னும் சொல்லை பயன்படுத்துதல்
8. வீர தீர பெண்மணிக்கு ‘கல்பனா சாவ்லா விருது’
9. ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவித் தொகையாக வழங்கப்படும் 25000 ரூபாயுடன், 4 கிராம் தங்க காசு
10. பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற பெண்களுக்கு 50,000 ரூபாய் திருமண நிதி உதவித் தொகையுடன் 4 கிராம் தங்கக் காசு
11. விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி
12. விலையில்லா ‘சானிடரி நாப்கின்’
13. விலையில்லா கால்நடைகள்

மகளிர் திட்டம் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள்

1. சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு
2. ஊக்க நிதி
3. தொழிற்திறன் பயிற்சிகள்
4. திறன் ரசீதுத் திட்டம்
5. கலாச்சாரப் போட்டிகள்
6. ஒரு கிராமம் – ஒரு உற்பத்திப் பொருள்
7. கல்லூரிச் சந்தைகள்
8. மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி
9. மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்
10. மதி பஜார் இணையதளம்
11. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு விருது
12. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வணிகக் குறியீடு

தென்னிந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர் என்பதால், மாநிலங்களவையில் தமிழக மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி உரையாற்றியுள்ளார். மாநிலங்களவையில் இவரது கன்னிப் பேச்சை மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

1991ஆம் ஆண்டு முதன் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பதவி வகித்தார். பின்பு 2001ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றார். தற்போது 2011ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

முற்றிலும் மகளிரால் இயக்கப்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், பெண்களுக்கென அதிரடிப்படை பிரிவு (Commandos) உருவாக்கியது, தொட்டில் குழந்தைகள் திட்டம் ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளில் சிலவாகும்.

சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் இந்திய அளவில் முதலிடம் பெற்ற மாணவிக்கு ரூ. 10 லட்சம் காசோலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

செல்வி பிரேமாவிற்கு அவரின் சாதனையைப் பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.02.2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் ரூ. 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஊக்கத் தொகையாக வழங்கி, மேலும் பல சாதனைகளைப் புரிந்து, வாழ்வில் வளம் பெற வேண்டுமென்று வாழ்த்தினார்கள்.

சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் அகில இந்திய அளவில் முதல் இடத்தைப் பெற்று சாதனை படைத்த மும்பையில் வாழும் தமிழ்ப்பெண் செல்வி பிரேமாவிற்கு ரூ. 10 லட்சம் காசோலையினை ஊக்கத் தொகையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம், பெரிய கொல்லியூர் கிராமத்தைச் சேர்ந்தவரும், மும்பையில் கடந்த 20 ஆண்டுகளாக ஆட்டோ ஓட்டுநர் தொழில் புரிந்து வருபவருமான திரு ஜெயக்குமாரின் மகள் செல்வி பிரேமா, அண்மையில் நடைபெற்ற சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வில் அகில இந்திய அளவில் முதல் இடத்தைப் பெற்றார்.

மிகவும் கடினமாக இந்த தேர்வில் முதலிடத்தைப் பெற்று தமிழ்ச் சமுதாயத் திற்கு பெருமை தேடித் தந்த செல்வி பிரேமாவை பாராட்டும் வகையில் தமிழக அரசின் சார்பில் ரூ. 10 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜனவரி 24ம் தேதியன்று அறிவித்தார். அதன்படி, செல்வி பிரேமாவிற்கு அவரின் சாதனையைப் பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.02.2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் ரூ. 10 லட்சத்திற்கான காசோலையினை ஊக்கத் தொகையாக வழங்கி, மேலும் பல சாதனைகளைப் புரிந்து, வாழ்வில் வளம் பெற வேண்டுமென்று வாழ்த்தினார்கள். ஊக்கத் தொகையினை பெற்றுக் கொண்ட செல்வி பிரேமா, தன்னை ஊக்குவிக்கும் வகையில், பாராட்டி நிதியளித்து வாழ்த்தியமைக் காக தனது நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியின், செல்வி பிரேமாவின் தந்தை திரு ஜெயக்குமார் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் உடனிருந்தனர். ■

சிறந்த கிராம ஊராட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை 05.02.2013 அன்று தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், காடாம்பாடி ஊராட்சித் தலைவர் எஸ். ரங்கசாமி அவர்கள் சந்தித்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறையால் சிறந்த கிராம ஊராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, காடாம்பாடி ஊராட்சிக்கு விருது வழங்கப்பட்டதையொட்டி வாழ்த்து பெற்றார். ■

முன்னாள் தமிழக முதலமைச்சர் அமரர்
எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாள் விழா

முன்னாள் தமிழக முதலமைச்சர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களின் 96வது பிறந்த நாள் விழாவையொட்டி, 17.01.2013 அன்று அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா, மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் வி. எஸ். விஜய், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. அ.முஹம்மதுஜான், சென்னை மாநகராட்சி மேயர் திரு சைதை துரைசாமி ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் முனைவர் மூ. இராசாராம், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

புதிய கட்டிடங்கள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.01.2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஈரோடு மாநகராட்சி புதிய அலுவலகக் கட்டிடத்தை காணொலி காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், ஈரோடு மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு, தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகராட்சியில் பேருந்து நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு நகராட்சி அலவலகக் கட்டிடம், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு, என மொத்தம் 9 கோடியே 74 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்கள். ■

தமிழகத்தை அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் பெற்ற மாநிலமாக மாற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டி அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

வீரதீர செயலுக்கான விருது

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியை அடுத்த நஞ்சை ஊத்துக்குளியை சேர்ந்த செந்தில்குமாரின் மகள் கிருத்திகா தற்போது மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார். கடந்த ஏப்ரல் மாதம் செந்தில்குமார் தனது குடும்பத்துடன் காங்கயம்பாளையம் அருகில் உள்ள நட்டாற்றீஸ்வரன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய சென்றார். பின்னர் அவர்கள் அங்குள்ள காவிரி ஆற்றில் குளித்தனர். அப்போது அவர்கள் அனைவரும் ஆற்றின் ஆழமான பகுதிக்கு சென்று விட்டனர். இதில் செந்தில்குமாரின் மனைவி, மகள்கள் கிருத்திகா மற்றும் ஷோபனா ஆகியோர் ஆற்றின் சுழலில் சிக்கி, தங்களை காப்பாற்றும்படி குரல் எழுப்பினார்கள். இதைக்கேட்ட அங்கு குளித்துக் கொண்டிருந்த சிலரும், செந்தில்குமாரும் சேர்ந்து பூங்கொடி, ஷோபனா ஆகியோரைக் காப்பாற்றினார்கள்.

ஆனால் கிருத்திகா மிகவும் ஆழமான பகுதிக்குச் சென்று விட்டதால் அவரை மற்றவர்களால் காப்பாற்ற இயலவில்லை. அங்கு நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த அதேபகுதியைச் சேர்ந்த சுகநாதன் என்ற மாணவன் துணிச்சலுடன் தண்ணீரில் குதித்து, மூழ்கிக் கொண்டு இருந்த கிருத்திகாவின் முடியைப் பிடித்து மேலே தூக்கி கொண்டு வந்து காப்பாற்றினார். தண்ணீரில் அதிக நேரம் மூழ்கி இருந்த கிருத்திகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

பல்வேறு சூழ்நிலைகளில் வீரதீர செயல்களில் ஈடுபடுகிற குழந்தைகளுக்கு மத்திய அரசின் குழந்தைகள் நலனுக்கான மத்திய கவுன்சில் ஆண்டுதோறும் விருது வழங்கி கவுரவிக்கிறது. இந்த ஆண்டுக்கான விருது பெறுவோர் பட்டியில் தமிழகத்தில் இருந்து ஈரோடு மாவட்டம் நஞ்சை ஊத்துக்குளியை சேர்ந்த சுகநாதனும் தேர்வு செய்யப்பட்டு, அவருக்கு டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவின் போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் விருது வழங்கி சிறப்பித்தார். ■

முற்றக் கச்சேரி

முற்றம் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்ற முற்றக் கச்சேரி மீண்டும் புதுப்பொலிவுடன் பிப்ரவரி மாதம் முதல் முற்றம் இதழில் தொடர்ந்து வெளிவரப்போகிறது. இந்தக்கச்சேரியில் மாதந்தோறும் மகளிர்திட்டத்தின்சமுதாய வள வல்லுநர்கள் மற்றும் புதுவாழ்வுத் திட்டத்தின் சமுதாய வல்லுனர்கள் கலந்து கொண்டு, குறிப்பிட்ட தலைப்பில் தங்களின் கருத்துக்களை விவாதிப்பார்கள்.

(அரியலூர் மாவட்டம், நிலா சுய உதவிக் குழுவின் ஊக்குநர்கள் செல்லப்பாங்கி, கலைவாணி, உறுப்பினர் பார்வதி மற்றும் சிறப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் சுபா ஆகியோர் தங்கள் குழுவில் விவாதித்த விபரத்தினை காண்போம்)

கலைவாணி : ஏம்மா பார்வதி நாம எதுக்காக கூட்டம் போட்டிருக்கோம்னு தெரியும்?

பார்வதி : தெரியாது.

செல்லப்பாங்கி : நீயே சொல்லு

கலைவாணி : நேத்து ஒரு விஷயத்தை கேள்விப்பட்டேன். என் தோழி வீட்டுல ஆம்பளப் பிள்ளை வேணும்னு இருந்தாங்க. ஆனா பொம்பளப்பிள்ளை பிறந்திருச்சுனு அதை கொன்னுட்டாங்க...

செல்லப்பாங்கி : இப்படியும் கூட நடக்குதா? அப்புறம் என்னாச்சு...

கலைவாணி : நான் சொல்லுறத நல்லா கேளுடி... கொன்னு போட்டுட்டு அந்த குழந்தையை பொதைச்சிட்டாங்களா... அது ஒரு சில பேருக்கு தெரிஞ்சு போச்சு... அதனால போலீஸ்க்கு தெரிஞ்சு போயிருமோனு பயந்திட்டு இருக்காங்க...

செல்லப்பாங்கி : இப்படி ஒரு கொடுமையா? எங்க ஊருலயும் பொம்பள பிள்ளைங்களை கருவிலேயே கொல்றாங்கடி. எங்க ஊருல ஸ்கேன் போட்டு பார்த்து விட்டு பொம்பள பிள்ளையா இருந்ததனால கருவையே கலைச்சிட்டாங்க. ஏன்னா அந்த பொண்ணை கண்ணாலம் பண்ணிக் கொடுக்க வரதட்சணை கொடுக்க முடியாததால இப்படி கலைச்சிட்டாங்க. இதே மாதிரி இன்னொரு கேசும் இருக்கு... இரண்டு பொம்பள பிள்ளைக்கு பின்னாலே மூன்றாவதா பொறந்த பொம்பளப் பிள்ளையை வளர்க்க முடியாம மூணே மாசத்திலே அதைக் கொன்னுட்டாங்க...

சுபா : எங்க ஊரில கூட ஆண் வாரிசு வேணுங்கறத்துக்காக ஜோசியம் பார்த்துட்டு, வயித்துல இருக்கிறது பொம்பளப் பிள்ளைன்னு தெரிஞ்ச உடனே கருவையே கலைச்சிட்டாங்க....

கலைவாணி : எங்க பக்கத்து வீட்டுல ஆறு பெண் குழந்தை இருந்துச்சு. அவங்களுக்கு ஆம்பள புள்ள வேணுமுன்னு ஆசை இருந்துச்சு.. ஏழாவதா ஒரு ஆம்பளப்புள்ளையும் பொறந்துச்சு. எல்லா குழந்தைகளையும் வளர்க்க முடியாதுன்னு இரண்டு பொம்பளப் புள்ளைகளை தொட்டில் குழந்தை திட்ட அலுவலகத்தில் கொடுத்துட்டாங்க.

அந்த பொண்ணோட கணவரும் மாமியாரும் இரண்டாவதும் பொம்பளப் புள்ளையா பிறந்தா இங்க வராத... ஆம்பளப்புள்ள பிறந்தா மட்டும் வீட்டுக்கு வான்னு சொல்லி அம்மா வீட்டுக்கு அனுப்பி விட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு இரண்டாவதும் பொம்பளப்புள்ளையா பொறந்துருச்சு, அதுக்காக ஆண் குழந்தையை தத்து எடுத்துக்கிட்டு...

பார்வதி : என்னாங்கடி... பொம்பள புள்ள. பொம்பளப்புள்ளன்னு பேசுறீங்க.. எங்க வீட்டுக் காரருக்கு ஒரு ஆப்ரேஷனுக்கு இரத்தம் தேவைப் பட்டப்போ என்னோட பசங்க இரண்டு பேரும்தான் இரத்தம் கொடுத்தாங்க. பொம்பளப்புள்ள இருந்தும் பொம்பளப்புள்ள இரத்தம் சேரலனுட்டாங்க. அதனால தான் என் வீட்டுக்காரர் இன்னைக்கு உயிரோட இருக்காரு... அது மட்டும் இல்லாமல் கொள்ளி வைக்க ஒரு ஆம்பளப்புள்ள கண்டிப்பா வேணும்.

சுபா : என்னம்மா சொல்றீங்க... பொம்பளப்புள்ள கொள்ளி போட்டா உடம்பு வேகாதா? நான் கூட பேப்பர்ல படிச்சேன், ஒரு பணக்காரருக்கு ஆம்பளப் புள்ளைங்களும் இருக்காங்க. அனாலும் அவர் செத்தப்புறம் அவரோட உடல மருத்துவக் கல்லூரியிலே பிள்ளைகள் படிப்பதற்கு தானமாக கொடுங்கன்னு உயில் எழுதி வைச்சுட்டாரு. அதனால கொள்ளிப் போடுறது எல்லா ஒரு பிரச்சனையே இல்ல.

கலைவாணி : நாம என்னத்தான் சொன்னாலும் ஆம்பளபுள்ள மேல மோகம் எல்லாருக்கும் இருக்கு. ஒரு அம்மா கலெக்டருக்கிட்ட ஒரு மனு கொடுத்தாங்க. அதுல பொறந்த ஒரு வாரமே ஆன ஒரு ஆண் குழந்தை எனக்கு தத்து எடுக்க உடனே வேணும் அப்படின்னு இருந்துச்சு... விசாரிச்சு பார்த்தா அந்த பொண்ணோட கணவரும் மாமியாரும் இரண்டாவதும் பொம்பளப் புள்ளையா பிறந்தா இங்க வராத... ஆம்பளப்புள்ள பிறந்தா மட்டும் வீட்டுக்கு வான்னு சொல்லி அம்மா வீட்டுக்கு அனுப்பி விட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு இரண்டாவதும் பொம்பளப்புள்ளையா பொறந்துருச்சு, அதுக்காக ஆண் குழந்தையை தத்து எடுத்துக்கிட்டு ஆம்பளப் புள்ள தான் பொறந்துச்சுன்னு சொல் லிடலாமுன்னுதான் மனு கொடுத்தேன் அப்படியினு சொல்லுச்சு. ஆனா சட்டப்படி பெத்தவங்க இரண்டு பேரும் சம்மதிச்சாதான் குழந்தையை தத்து எடுக்க முடியும்னு சொல்லி, அவங்க இரண்டு பேரையும் கூப்பிட்டு பெண் குழந்தைப் பாதுகாப்பு திட்டம் பற்றி அதிகாரிங்க விளக்கம்மா சொன்னாங்க...

செல்லப்பாங்கி : அது என்ன திட்டம்? எங்களுக்கும் கொஞ்சம் விளக்கமாக சொல்லு...

சுபா : பெண் சிசுக்கொலையைத் தவிர்க்க அரசு கொண்டு வந்துள்ள திட்டம்தான் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம். முதல் குழந்தை பெண் குழந்தை என்றாலும் அது மட்டுமே போதும் என்று குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் செய்து கொண்டால் அந்த பெண் குழந்தையின் பெயரில் 50,000/– ரூபாய் டெபாசிட் செய்யப்படும். அந்த குழந்தைக்கு 20 வயது முடியும்போது இந்தப் பணம் வட்டியோடு கிடைக்கும். கிட்டத்தட்ட 1.50 லட்சம் ரூபாய் வரை கிடைக்கும். இந்தப் பணம் அந்தப் பெண்ணின் திருமணத்திற்கோ அல்லது மேல்படிப்பிற்கோ பயன்படும். இதேபோல் இரண்டு பெண் குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்து விட்டாலும் அதுவே போதும் என்று நினைத்து குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் செய்து கொண்டால் ஒவ்வொரு பெண் குழந்தை பெயரிலும் 25,000/– ரூபாய் டெபாசிட் செய்யப்படும். அந்த குழந்தைகளுக்கு 20 வயது முடியும்போது அந்தப் பணம் அளிக்கப்படும். ஆனால் இரண்டு விஷயம் முக்கியம். ஒன்று, அந்தப் பெண் குழந்தைகளுக்கு 20 வயது முடிந்தாலும் அந்தக் குழந்தைகள் கண்டிப்பா பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் (தேர்ச்சி அல்லது தோல் விபற்றி கவலை தேவையில்லை. 10ஆம் வகுப்பு பரீட்சை எழுதியிருக்க வேண்டும்) அடுத்து அந்த குடும்பத்தில் ஆண் குழந்தையே இல்லை என்ற சான்று அளிக்க வேண்டும். இந்த உதவியைப் பெற அந்தந்த பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் முக்கிய சேவிகா, கிராம சேவிகா–வை அணுகலாம். அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட சமூக நல அலுவலரிடம் விண்ணப்பிக்கலாம்.

செல்லப்பாங்கி : எங்க உறவுக்காரங்க கூட இந்த மாதிரி இரண்டு குழந்தையோட ஆபரேஷன் பண்ணி பணம் வாங்கியிருக்காங்க. இன்னொருத்தருகூட அவங்க குழந்தையை வளர்க்க முடியாம தொட்டில் குழந்தை திட்டத்தில் கூட குழந்தையை சேர்த்துட்டாரு. அவங்க நல்லா படிக்க வைச்சு நல்லா முன்னேத்துவாங்க. இப்போ அந்த பொம்பள புள்ளயோட வாழ்க்கை நல்லா இருக்கு...

சுபா : இப்படி கருவிலேயே பெண் குழந்தையை கொல்றாங்களே... எனக்கு ஒரு குழந்தை கூட இல்லாததனால என்னோட வாழ்க்கையிலே என்ன நடந்துச்சு தெரியுமா? இத்தனைக்கும் என்னை விரும்பி கல்யாணம் பண்ணிக்கிட்ட எங்க வீட்டுக்காரரு வீட்டுல டி.வி. சத்தத்தை அதிகமா வைச்சு வெளியில யாருக்கும் தெரியாம இருக்கனுன்னு அடியா அடிச்சாரு... என்னோட மாமனாரும் மலடின்னு சொல்லி சொல்லி அடிச்சாங்க. எனக்கு ஆதரவா பேச அங்க யாருமே இல்லை.

செல்லப்பாங்கி : உங்க அம்மா அப்பாக்கிட்ட கூட நீ சொல்லலையா?

சுபா : அப்படி சொன்னா காதல் திருமணம் பண்ணிக்கிட்டதனால என்னதான் திட்டுவாங்கன்னு சொல்லல. இதனால மன அழுத்தம் வந்திருச்சு. மூன்று வருடமாக குழந்தை இல்லைன்ன அதுக்கு என்னையே தான் குத்தம் சொன்னாங்க. அதுக்கும் ஆஸ்பத்திரி போயி மருந்த மாத்திரை எல்லாம் சாப்பிட்டு, கர்ப்பப்பையும் சுத்தம் பண்ணுனாங்க. அதுக்கு அப்புறம் கூட என்னை வீட்டுக்கு வரவேண்டான்னு சொன்னாங்க... ■

(தொடரும்)

முதல் குழந்தை பெண் குழந்தை என்றாலும் அது மட்டுமே போதும் என்று குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் செய்து கொண்டால் அந்த பெண் குழந்தையின் பெயரில் 50,000/– ரூபாய் டெபாசிட் செய்யப்படும். அந்த குழந்தைக்கு 20 வயது முடியும்போது இந்தப் பணம் வட்டியோடு கிடைக்கும்.

இரண்டு பெண் குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்து விட்டாலும் அதுவே போதும் என்று நினைத்து குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் செய்து கொண்டால் ஒவ்வொரு பெண் குழந்தை பெயரிலும் 25,000/– ரூபாய் டெபாசிட் செய்யப்படும். அந்த குழந்தைகளுக்கு 20 வயது முடியும்போது பணம் கிடைக்கும்.

பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவிகளைப் பெற பெண் குழந்தைகள் கண்டிப்பா பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் (தேர்ச்சி அல்லது தோல்விபற்றி கவலை தேவையில்லை). அடுத்து அந்த குடும்பத்தில் ஆண் குழந்தையே இல்லை என்ற சான்று அளிக்க வேண்டும்.

பேரிக்காய்

இதனை நாட்டு ஆப்பிள் என்று அழைப்பார்கள். வெளித் தோற்றத்திற்கு பச்சைக்காய் போல் தோன்றும் இது குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே கிடைக்கும் பழமாகும். இக்காலங்களில் அதை வாங்கி சாப்பிடுபவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுவார்கள். சுவையான இந்தப் பழத்தில் ஏ, பி, பி2 என வைட்டமின்கள் நிறைந்துள்ளன. வளரும் குழந்தைகளுக்குத் தேவையான இரும்புச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் கணிச மான அளவு இந்தப் பழத்தில் நிறைந்துள்ளது. எலும்பு, தசை வளர்ச்சிக்கும், உடல் வலுவுக்கும் பேரிக்காய் உதவுகிறது. இரவு உணவிற்குப் பின்னர் தூங்கச் செல்லும் முன், ஒரு பழம் வீதம் குழந்தைகளுக்கு சாப்பிடக் கொடுத்தால், அவர்களின் உடல் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கருவில் இருக்கும் குழந்தை நன்கு வளர பேரிக்காய் பெரிதும் உதவுகிறது. கருவில் உள்ள குழந்தையின் எலும்பு வலிமை பெற பேரிக்காய் சிறந்த மருந்து. பிறந்த குழந்தைக்கு தாய்ப்பாலே சிறந்த ஊட்டச்சத்து மிகுந்த உணவாகும். தாய்ப்பாலில் நோய்

எதிர்ப்பு சக்தி அதிகம். குழந்தை பிறந்தது முதல் தாய்ப்பால் கொடுப்பது மிகவும் அவசியம். ஆனால் தற்போது தாய்ப்பால் கொடுப்பது குறைந்து வருகிறது. சில பெண்களுக்கு தாய்ப்பால் சரியாக சுரப்பதில்லை. இவர்கள் காலையிலும், மாலையிலும் ஒரு பேரிக்காய் வீதம் தினமும் சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிப்பதுடன், வயிற்றுப் புண், வாய்ப்புண் போன்றவையும் குணமாகும்.

யோகா செய்யலாமா?

கேள்வி

என் தோழிக்கு முதல் குழந்தை பிறந்து நான்கு மாதங்கள் ஆகின்றன. பிரசவத்திற்கு பின்னர் தற்போது அவளின் வயிறு தொப்பை போல் காணப்படுகிறது. யோகா பயிற்சியின் மூலம் வயிற்றை பழைய நிலைக்கு கொண்டு வர முடியுமா?

பதில்

சிசேரியன் முறையில் பிரசவம் என்றால் ஆறு மாதம் வரை எந்தப் பயிற்சியும் செய்யக் கூடாது. அதன் பிறகு மருத்துவரின் ஆலோசனைப்படி தகுந்த யோகா பயிற்சியாளரிடம் குறிப்பிட்ட யோகாசனங்களை கற்று செய்வதன் மூலம் நிவாரணம் கிடைக்கும். சுகப்பிரசவம் என்றால் 40 நாட்களுக்குப் பிறகு யோகாசனங்களை செய்யலாம். பால் கொடுக்கும் தாய்மார்கள் யோகாசனம் செய்வதால் அதிக கலோரி வெளியேறும். அதனை சமன்படுத்த புரோட்டின் சேர்ந்த உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும்

புண்கள் குணமாகுமா...?

கேள்வி

என் சகோதரியின் கைவிரல் இடுக்குகளில் அடிக்கடி புண்கள் வருகின்றன. இதனால் பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது போன்ற வேலைகளை செய்வது சிரமமாக இருக்கிறது. இதற்கு நிவாரணம் என்ன?

பதில்

துணி துவைக்க பயன்படுத்தும் சோப்புகள் மற்றும் பவுடர்கள், பாத்திரம் கழுவ பயன்படுத்தும் பொடிகளின் காரணமாக அலர்ஜி ஏற்படுவதல் கைவிரல்களில் புண்கள் வருகின்றன. தண்ணீரில் உள்ள பாக்டீரியாக்களின் காரணமாக சிலருக்கு தண்ணீரில் கைவைத்தாலே கைகளில் புண்கள் வரும். எனவே மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிக்சை எடுத்துக் கொள்வது அவசியம். மேலும் துணி துவைக்கும் போதும், பாத்திரம் கழுவும் போதும் கைகளில் அணிந்து கொள்ளும் வண்ணம் காட்டன் மற்றும் பிளாஸ்டிக் கையுறைகள் உள்ளன. அவைகளை வாங்கி பயன்படுத்துவதன் மூலம் கைகளில் புண் வராமல் தவிர்க்கலாம்.

தேவையான பொருட்கள்

ராகி மாவு – 1 கப், அரிசி மாவு, ரவை தலா 4 ஸ்பூன், பொடியாக நறுக்கிய கோஸ், கேரட் தலா அரை கப், வெங்காயம் – 1, முருங்கைக் கீரை – ஒர கைப்பிடி, இஞ்சி – சிறிய துண்டு, பச்சை மிளகாய் – 3, எண்ணெய், கடுகு, சீரகம், உப்பு தேவையான அளவு, கறிவேப்பிலை சிறிதளவு.

செய்முறை

பச்சை மிளகாய், இஞ்சியை பொடியா நறுக்கிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் ராகி மாவு, அரிசி மாவு, ரவை, தேவையான அளவு உப்பு ஆகியவற்றை போட்டு கலந்து, தோசை மாவு பதத்திற்கு கரைத்து வைத்துக் கொள்ளவும்.

கடாயில் ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி, கடுகு, சீரகம், இஞ்சி, கறிவேப்பிலை போட்டு தாளித்து அதில் வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு சிறிது வதக்கவும். பின்னர் அதில் பொடியாக நறுக்கி வைத்துள்ள கேரட், கோஸ், முருங்கைக் கீரையைப் போட்டு கிளறி தேவையான அளவு உப்பு சேர்த்து பாதி அளவு வேகவைத்து அதை ராகி மாவில் கொட்டவும். பின்னர் இந்த மாவை நன்றாக கலந்து தோசைகளாக வார்த்து பரி மாறவும். சத்துக்கள் நிறைந்ததும், சுவையானதுமான இந்த தோசை குழந்தைகளும் பெரியவர்களும் விரும்பிச் சாப்பிடும் உணவாகும். ■

பெண்களின் மேனி அழகினை பராமரிக்க இயற்கைப் பொருட்களை பயன்படுத்துவது சிறந்த பயனை தரும்.

அழகுடன் மிளிர...

கடலை மாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் மித மான சுடுநீரில் கழுவ, முகம் மிருதுவாகும்.

பச்சை உருளைக் கிழங்கின் சாற்றை முகத்தில் தடவி வர சூரியக் கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.

2 ஸ்பூன் முள்ளங்கிச் சாற்றுடன் 2 ஸ்பூன் மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணி நேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தினசரி செய்து வர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளிகள் மறையும்.

பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களைச் சுற்றி வைத்தால், கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.

பப்பாளி பழத்தை அரைத்து, முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.

புளித்த மோரை முகத்தில் தடவி, 15 நிமிடங்களுக்குப் பின்னர் மிதமான சுடுநீரில் முகத்தை கழுவினால் முகம் பொலிவு பெறும். இதைத் தொடர்ந்து 15 நாட்களுக்கு செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

தேங்காய்த் தண்ணீரை முகத்தில் தொடர்ந்து 6 மாதம் தடவி வர சின்னம்மையால் ஏற்பட்ட வடு மறையும்.

முழங்கை கருப்பாகவும், சொரசொரப்பாகவும் இருந்தால், தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவி வர மிருதுவாக மாறும்.

தயிருடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும். ■

கொய்யாப் பழம்

வைட்டமின் பி மற்றும் வைட்டமின் சி ஆகிய உயிர்ச் சத்துக்களும், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு போன்ற தாது உப்புக்களும் கொய்யாப்பழத்தில் நிறைந்துள்ளன. வைட்டமின் சி சத்து நிறைய இப்பழத்தில் உள்ளதால், வளரும் குழந்தைகளுக்கு இப்பழம் ஒரு வரப்பிரசாதம் ஆகும். உடல் வளர்ச்சிக்கும், எலும்புகள் பலப்படவும் கொய்யாப்பழம் உதவும். கொய்யாவின் தோலில் தான் அதிக சத்துக்கள் உள்ளன. எனவே தோலுடன் சாப்பிட வேண்டும்.

வெந்தயக் கீரை

பசி எடுக்காமல் இருப்பவர்களுக்கு வெந்தயக் கீரையை தொடர்ந்து கொடுத்து வந்தால் நன்றாகப் பசி எடுக்கும். உடல் ஆரோக்கியமாகும். கபம் மற்றும் வாயுக் கோளாறுகள் விலகும். அடிக்கடி வரும் இருமல் நீங்கும். நாக்கில் ருசி இல்லாமல் இருந்தால் மாறி சுவையுணர்வு ஏற்படும். வயிற்றில் ஏற்படும் உப்புசம் போன்றவற்றை நீக்கும் வெந்தயக்கீரை வாதம் மற்றும் காச நோய்களுக்கு மிகவும் நல்லது. எனவே அடிக்கடி பல்வேறு கீரைகளை அளவில் சேர்த்து வருவது உடல் நலத்திற்கு நன்மையை கொடுக்கும்.

பெண்கள் இதய நல தினம்

பிப்ரவரி 1

பெண்களை தாக்கும் இதய நோய்...

பெண்களின் மரணத்துக்கு முக்கிய மூல காரணங்களில் ஒன்றாக உள்ள இதய நோய் பற்றி பெண்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே பெண்களின்இதயநலதினத்தின்நோக்கமாகஉள்ளது.மார்பகப்புற்றுநோயை விட இதய நோய் 17 மடங்கு அதிகமாக பெண்களை பாதிக்கிறது. ▪

புற்றுநோய் விழிப்புணர்வு தினம்

பிப்ரவரி 4



விழிப்புணர்வு பெற்றிடுவோம்...

அமைதியாகக் கொல்லும் கொடிய நோய்களில் ஒன்றான புற்றுநோயினை பற்றி அறிந்துக் கொண்டு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆண்டுதோறும் பிப்ரவரி 4ஆம் தேதி ‘உலகப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம்’ அனுசரிக்கப்பட்டு வருகிறது. பீடி சிகரெட் போன்ற புகை மற்றும் புகையிலை பழக்கம் புற்றுநோய்க்கு மூல முக்கிய காரணமாக உள்ளதுடன், சுற்றுச்சூழல் மாசும் புற்றுநோய் ஏற்படக் காரணமாக உள்ளது. ▪

சாரணர் தினம்

பிப்ரவரி 22

எதற்கும் தயாராக இரு...

சாரணர் இயக்கம் உலகளவில் செயல்படும் ஓர் இளைஞர் இயக்கமாகும். வாய்மை, நேர்மை, நம்பகத்தன்மை, தேசப்பற்று, நேசம், ஜீவகாருண்யம், மரியாதை. தைரியம் போன்ற இன்னோரன்ன ஆளுமை விருத்தியம்சங்களைக் கொண்ட மனித நேயப்பண்புகளுடன் சேவைகள் மூலம் சமூகத்துடன் ஒன்றிணைந்த அமைப்பாக மிளிரும், ‘எதற்கும் தயாராக இரு’ எனும் தொனிப் பொருளைக் கொண்ட சாரணிய இயக்கத்தை உருவாக்கிய பிதாவாகக் கருதப்படும் பேடன் பவல், 1857 பிப்ரவரி 22ம் தேதி பிறந்தார்.

இளம் வயதில் பிரிட்டன் இராணுவத்தில் இணைந்து கொண்ட பேடன் பவுல், தென்னாப்பிரிக் காவில் பணியாற்றியபோது, 1907ஆம் ஆண்டில் 22 இளைஞர்களுடன் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார். 1910ல் சாரணியம் உலகெங்கும் பரவத் தொடங்கியது. தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் சாரணர் சங்கங்கள் செயல்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் செயல்படும் தொண்டு நிறுவனமாக சாரணர் அமைப்பு விளங்குகின்றது.

1912ல் உலக சகோதரத்துவத்தை வளர்க்கும் வண்ணம் உலகப் பயணத்தை பேடன் பவல் மேற் கொண்டார்.

இதேவேளை அவரது மனைவி சீமாட்டி ஒபவோ பேடன் பவல் 1910ல் பெண்கள் சாரணியத்தை ஆரம்பித்து உலகெங்கும் வியாபிக்க வழிகோலினார். இன்று சாரணியர் இயக்கமும், பெண்கள் சாரணிய இயக்கமும் சமுதாய வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றன. இவை எதிர்காலச் சமூகத்திற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றன. உலக சகோதரத்துவத்தை இலட்சியமாகக் கொண்ட சாரணியத் தின் மூலமாக உலக நாடுகளில் சமாதானத்தையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புதல் வேண்டும் என்பதே இன்றைய எதிர்பார்ப்பாகும்.

ராபர்ட் பேடன் பவல் பெண்கள் இயக்கத்தை உருவாக்கிய போது, பெண்கள் பிரிவை கைட்ஸ் பிரிவு என்று பெயரிட்டார். சாரணியாக இருந்தால், பெண்களுக்குள் ஒரு அனுகூலமாக மாற்றம் ஏற்படுகிறது என கைட் தலைவராக இருக்கும் ஏஞ்சலா மிலன் கூறுகிறார். இந்த நூறு ஆண்டுகளில் பெண் சாரணர் இயக்கம் உலகம் முழுவதும் பரவி விட்டது. இதில் கிட்டத்தட்ட 1 கோடி பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்களிடையே தன்னம்பிக்கையை மேம்படுத்துவதற்காக கூடாரம் அமைப்பது, யோகாசனம் செய்வது, வீடியோ கேமராக்கள் இயக்குவது உள்ளிட்ட பல விஷயங்களை சொல்லித் தரப்படுகிறது. ■

இன்று சாரணியர் இயக்கம், சமுதாய வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றன. இவை எதிர்காலச் சமூகத்திற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றன. சாரணியத்தின் மூலம் சமாதானத்தையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புதல் வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

அனைத்துலகத் தாய்மொழி நாள்

பிப்ரவரி 21

தாய்மொழியைக் காப்போம்...

அனைத்துலகத் தாய்மொழி நாள் பிப்ரவரி 21 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 1952ஆம் ஆண்டு இதே நாளில் அன்றைய கிழக்கு பாகிஸ்தான் தலைநகர் டாக்காவில் வங்காள மொழியை அரசு மொழியாக ஆக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது உயிர் நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூரப்படும் நாளாக அனுசரிக்கப்படுகிறது.

1999, பிப்ரவரி 21 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தின் (யுனெஸ்கோ) பொது மாநாட்டின் 30வது அமர்வில், இந்நாள் அனைத்துலக தாய் மொழி நாளாக அறிவிக்கப்பட்டது. பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேணுவதுடன், அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும் உருவாக்கும் எண்ணத்தோடு இந்த நாளை யுனெஸ்கோ அறிவித்தது. 2000ஆவது ஆண்டு முதல் இந்த நாளானது உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. ■

தேசிய அறிவியல் தினம்

பிப்ரவரி 28



வளரும் அறிவியல்...

தேசத் தலைவர்கள் மற்றும் தியாகிகளைக் கொண்டாடுவது போல அறிவியல் மேதைகளும் போற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 1987ம் ஆண்டு தேசிய அறிவியல் தினம் அறிமுகப் படுத்தப்பட்டது. பொதுவாக தேசத் தலைவர்களின் பிறந்த மற்றும் நினைவு நாட்களே சிறப்பு நாட்களாக அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த இரண்டு வகையிலும் அல்லாமல் இந்திய மண்ணில் பிறந்து உலகம் போற்றும் வகையில் பல அறிய கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து வெளியிட்டவரும், சிறந்த இயற்பியல் மேதையுமான சர். சி. வி. ராமன் தன்னுடைய நோபல் பரிசு பெற்ற ஆராய்ச்சி முடிவை வெளியிட்ட பிப்ரவரி 28ம் தேதியைத்தான் தேசிய அறிவியல் தினம் என அறிவிக்கப்பட்டது.

எந்த ஒரு நாகரீகத்திற்கும் அடிப்படையான அறிவியலின் சிறப்பை இளம் தலைமுறை மாணவர்களுக்கு கூறும் வகையிலும், நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பல புதிய அறிவியல் சிந்தனைகளைக் கண்டறிவதும், அதனைத் தகுந்த முறையில் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், புதிய கண்டுபிடிப்புகளை வரவேற்பதுமே அறிவியல் அறிஞர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான நன்றிக்கடன் என்பதை உணரச் செய்வதே இந்நாளின் நோக்கமாகும். ■

விருதுநகர்

வன்முறைக்கு எதிரான போராட்டம்

விருதுநகர் மாவட்டம், மடவார் வளாகம் கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்காள பரமேஸ்வரி மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் பாலியல் வன்முறைக்கு எதிரான கண்டனப் போராட்டம் நடைபெற்றது. திருவில்லிப்புத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இப்போராட்டத்தில் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள் குறித்தும், விழிப்புணர்வு குறித்தும் விளக்கிக் கூறப்பட்டது.

நாமக்கல்

பரிசளிப்பு விழா

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் கலாச்சாரப் போட்டிகள் மகளிர் திட்டம் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற இப்போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். கோலம், நாடகம், பட்டிமன்றம் மற்றும் குழுப்பாட்டு ஆகிய போட்டிகள் நடைபெற்றன. ஏராளமான பெண்கள் இதில் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். ■

பெரம்பலூர்

கல்லூரி சந்தை

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை கல்லூரி மாணவ மாணவியர்களிடையே பிரபலப்படுத்தும் வகையில் கல்லூரி சந்தைகள் நடைபெற்று வருகின்றன. பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் தரேஸ் அஹமது, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். கல்லூரி செயலாளர், மகளிர் திட்ட அலுவலர், கல்லூரி முதல்வர், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பல்வேறு பொருட்கள் இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்டன. ■

திருநெல்வேலி

கலாச்சாரப் போட்டிகள்

திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் கலாச்சாரப் போட்டிகள் நடைபெற்றன. கோலம், ரங்கோலி, பட்டிமன்றம், குழுவாகப் பாடுதல், தெருக்கூத்து மற்றும் நாடகம் போன்றவற்றின் வாயியாக பெண்களின் நிலை, வரதட்சணை, குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, சிசுக்கொலை, எய்ட்ஸ், தண்ணீர் பிரச்சனை, உடல் நலம் மற்றும் பொது சுகாதாரம் போன்ற பிரச்சனைகள் குறித்த கருத்துக்கள் இப்போட்டிகளில் இடம் பெற்றிருந்தன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். ■

39வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் காண்பவர் வியக்கும் மகளிர் திட்ட அரங்கு

சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் 39வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அனைத்துத் தரப்பினரையும் கவரும் பொழுதுபோக்கு அம்சங்களும், பல்வேறு அரசுத் துறைகளின் சாதனை விளக்க அரங்குகளும், தரமான பொருட்களை விற்பனை செய்யும் கடைகளும் நிறைந்துள்ளதால் இப்பொருட்காட்சிக்கு மக்கள் குடும்பம் குடும்பமாக வருகை தந்து மகிழ்ச்சியுடன் பொழுதை களிப்பதுடன், அங்கு அமைக்கப்பட்டிருக்கும் விற்பனை அரங்குகளில் தங்களுக்குத் தேவையானப் பொருட்களையும் வாங்கிச் செல்கின்றனர். மேலும் இப்பொருட்காட்சியில் உள்ள கலையரங்கில் மாலை நேரத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இச்சிறப்பு மிகுந்த பொருட்காட்சியில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வுத் திட்டத்தின் சார்பிலும் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள், சாதனைகள், புதுவாழ்வுத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்த விபரங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள் போன்றவை குறித்த விளக்கப்படங்களும், செய்திகளும் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த விபரங்களும் இடம் பெற்றுள்ளன.

மேலும் இப்பொருட்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் வகையில் விற்பனை அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால் பொருட்காட்சிக்கு வருகை தருபவர்கள் ஆர்வத்துடன் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

இப்பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருக்கும் கலையரங்கில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை அனைவருக்கும் விளக்கும் வண்ணம் 10.02.2013 அன்று கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பொருட்காட்சிக்கு வருகை தந்த அனைவரையும் பெரிதும் கவரும் வகையில் இக்கலைநிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த அறிமுகப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த அறிமுகப் பயிற்சி மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 'தொலைநோக்குத் திட்டம் 2013' குறித்த கருத்தரங்கு நாகப்பட்டினம் மாவட்டத்தில் 14.02.2013 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு அறிமுகப் பயிற்சியினைத் துவக்கி வைத்தார். ■

கடலூர்

திட்ட விளக்க கலைநிகழ்ச்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் குறிக்கோள், அடிப்படை கோட்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த தகவல்களை கிராமப்புற பொதுமக்களிடையே விளம்பரம் செய்யும் தகவல் தொடர்பு சாதனமான விளம்பர ரதத்தினை 01.02.2013 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த ரதம் கடலூர், அண்ணாகிராமம், பண்ருட்டி, கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த அனைத்து கிராமங்களிலும் இயக்கம் குறித்து விளம்பரம் செய்திடுவதுடன், ரதத்துடன் செல்லும் கலைக்குழுவின் மூலம் திட்ட விளக்க கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. ■

மக்கள் நலம் நாடும் அரசின் மகத்தான திட்டம்!

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மலிவுவிலை சிற்றுண்டி உணவகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்

சுய உதவிக் குழு மூலம் தயாரிக்கப்பட்ட உணவினை பார்வையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உணவு தயாரிக்கப்பட்ட விதம் குறித்து அவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இந்த மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களில் காலை 7 மணி முதல் 10 மணி வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், மதிய உணவாக நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும். இந்தத் திட்டம் அந்தந்த பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணி புரிபவர்களும், சென்னைக்கு பணி நிமித்தமாக வந்து செல்பவர்களும் பயன் பெறும் வகையில் சுகாதார மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்குவதற்காக சிற்றுண்டி உணவகங்கள் தொடங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இத்திட்டத்தின் தொடக்கமாக, வார்டிற்கு ஒன்று வீதம் 200 சிற்றுண்டி உணவகங்கள் துவக்க பணிகள் தொடங்கப்பட்டு, முதற்கட்ட மாக சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில், திருவொற்றியூர் மாநகராட்சி வணிக வளாகம்; மணலி மாநகராட்சி கட்டிடம்; மாதவரம், சூரப்பட்டு சமூக நலக்கூடம்; பழைய வண்ணாரப்பேட்டை, பொம்மி சிவராமுலு தெரு மாநகராட்சி கட்டடம்; சென்னை–1, நாட்டுப் பிள்ளையார் கோவில் தெரு மாநகராட்சி கட்டடம்; புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலை பழைய மண்டல அலுவலகம்; அம்பத்தூர், ஒரகடம் மாநகராட்சி கட்டடம்; கீழ்ப்பாக்கம், டெய்லர்ஸ் சாலை பழைய மண்டல அலுவலகம்; சாந்தோம் நெடுஞ்சாலை மாநகராட்சி கட்டடம், தியாகராய நகர், சிவஞானம் சாலை மாநகராட்சி கட்டடம்; மதுரவாயல், பூந்தமல்லி நெடுஞ் சாலை மாநகராட்சி கட்டடம்; நங்கநல்லூர், நேரு நெடுஞ் சாலை மாநகராட்சி கட்டடம், திருவான்மியூர், பி.ஜீ.ஈ. காலனி மாநகராட்சி கட்டடம், பெருங்குடி, அண்ணா நெடுஞ்சாலை வணிக வளாகம்; துரைப்பாக்கம், கண்ணகி நகர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிற்பயிற்சி கூடம் ஆகிய 15 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.02.2012 அன்று, சென்னை சாந்தோம் நெடுஞ்சாலையில் நடைபெற்ற விழாவில் குத்துவிளக்கேற்றி

திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து மூன்று நபர்களுக்கு உணவினை வழங்கி விற்பனையை துவக்கி வைத்தார்கள். மேலும், மகளிர் சுய உதவிக் குழு மூலம் தயாரிக்கப்பட்ட உணவினை பார்வையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உணவு தயாரிக்கப்பட்ட விதம் குறித்து அவர்களிடம் கேட்டறிந்தார்கள். இந்த மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களில் காலை 7.00 மணி முதல் 10.00 மணி வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கு சிற்றுண்டியாகவும், மதிய உணவாக நண்பகல் 12.00 மணி முதல் 3.00 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும். இந்தத் திட்டம் அந்தந்த பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சி துணை மேயர், சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க உயர்மட்ட அதிகாரக் குழுக் கூட்டம்

சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை மாநில அளவில் சிறப்பாக செயல்படுத்துவது குறித்தும், அதன் முன்னேற்றங்கள் குறித்தும் விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த உயர்மட்ட அதிகாரக் குழுக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 13.02.2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நிதித்துறை, வேளாண்மைத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு செயலாக்கத் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, உணவு, கூட்டுறவு மற்றும் குடும்ப நலத்துறை, சிறு தொழில் துறை ஆகியவற்றின் முதன்மைச் செயலாளர்கள் மற்றும் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, இந்திய தொழில் கூட்டமைப்பின் மாநில அளவிலான வங்கிகளின் பிரதிநிதிகள், ரிசர்வ் வங்கியின் பொதுமேலாளர், நபார்டு வங்கி தலைமை பொது மேலாளர், பன்னாட்டு வேளாண்மை வங்கியின் திட்ட இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை மாநில அளவில் சிறப்பாக செயல்படுத்துவது குறித்தும், அதன் முன்னேற்றங்கள் குறித்தும் விரிவான ஆலோசனைகள் மேற் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள், இக்கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புற செய்திருந்தார்.

அரசு செய்திகள்

மகாத்மா காந்தியடிகளின் 66வது நினைவு நாளையொட்டி 30.01.2013 அன்று சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.01.2013 அன்று தமிழகத்திற்கு வருகை தந்த மேதகு இந்திய குடியரசு துணைத்தலைவர் திரு. முகமது ஹமீது அன்சாரி அவர்களை சென்னை விமான நிலையத்தில் பொன்னாடை போர்த்தி மலர்க்கொத்து வழங்கி வரவேற்றார்கள். மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் உடனிருந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.01.2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 01.02.2013 அன்று சட்டப் பேரவையில், 2013ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரை தொடங்கி வைத்து உரையாற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை 18.02.2013 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய டுடே குழுமத்தின் மேலாண்மை ஆசிரியர் திரு. ராஜிவ் பை அவர்கள் சந்தித்து, இந்தியா டுடே குழுமத்தின் சார்பில் தேசிய அளவில் வழங்கப்படும் விருதுகளில், பத்தாண்டுகளில் மிக முன்னேறிய மாநிலம் என்ற வரிசையில் தமிழ்நாட்டிற்கு இரண்டாவது இடம் கிடைத்திருப்பதாகவும், பெரிய மாநிலங்களில் வேளாண்மைத் துறையில் தமிழ்நாட்டிற்கு முதல் இடம் கிடைத்து இருப்பதாகவும் தெரிவித்து, அதற்கான விருதுகளை நேரில் வழங்கினார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 07.02.2013 அன்று ஆளுநர் மாளிகையில், நீதியரசர் திரு. ராஜேஷ்குமார் அகர்வால் அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 15.02.2013 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், சத்துணவில் 13 வகையான கலவை சாதங்கள் வழங்கும் திட்டம் தொடங்குவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர், முதன்மைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2013ஆம் ஆண்டு சென்னையில் நடைபெறவுள்ள ஆசிய தடகளப் போட்டிகளை நடத்துவதற்கான உயர்நிலை வழிகாட்டுதல் குழுவின் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.02.2013 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், சென்னையில் நடத்தப்படவுள்ள ஆசிய தடகளப் போட்டிகளுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

64வது குடியரசு தின விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். வீரதீரச் செயல் புரிந்தவர்களுக்கு அண்ணா பதக்கங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நாட்டின் 64வது குடியரசுதினவிழா நாடுமுழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தமிழக அரசு சார்பில், சென்னை காமராஜர் சாலையில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில் பங்கேற்க வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, தமிழக அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் வரவேற்று விழா மேடைக்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் விழா மேடைக்கு வருகை தந்த மேதகு தமிழக ஆளுநர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வரவேற்று, முப்படைத் தளபதிகள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளை மேதகு ஆளுநருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை முன்னிலையில், மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

அணிவகுப்பு மரியாதை

ஹெலிகாப்டர் வானில் வலம் வந்து மலர் தூவ, முப்படை வீரர்களின் எழுச்சிமிகு அணிவகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், ஏவுகணை, ரேடார், செயற்கைக்கோள் ஆகியவற்றின் மாதிரிகளுடன், விமானப்படை வாகனம், கப்பற்படையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய போர்க்கப்பலான 'விக்ரமாதித்யா' மாதிரியுடன் கடற்படை வாகனம், பீரங்கியுடன் ராணுவ வீரர்களின் வாகனங்கள், ராணுவ கன ரக தொழிற்சாலை வாகனம் போன்றவை அணிவகுத்து வந்தன.

> விழா மேடைக்கு வருகை தந்த மேதகு தமிழக ஆளுநர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வரவேற்று, முப்படைத் தளபதிகள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளை மேதகு ஆளுநருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மத்திய–மாநில போலீஸ் படைகள், கடலோரப் பாதுகாப்பு குழு, ஆண்–பெண் தமிழ்நாடு கமாண்டோ படை, குதிரைப்படை, சிறைத்துறை படை, தீயணைப்புத்துறை படை, ஊர்க்காவல் படை, முப்படையின் தேசிய முதுநிலை மாணவர்கள், பள்ளி–கல்லூரி மாணவ மாணவிகள், சாரண மாணவ மாணவிகள் ஆகியோரின் அணிவகுப்பும், அவர்களது இசைக்குழுவினரின் அணிவகுப்பும் நடந்தது. இந்த அணிவகுப்பு மரியாதையை மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

பதக்கங்கள் – விருதுகள்

இதனையடுத்து, வீரதீர செயல்புரிந்தோருக்கான அண்ணா பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம் மற்றும் காந்தி யடிகள் காவலர் பதக்கம் ஆகியவற்றையும், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைபிடித்து, அதிக உற்பத்தித் திறன் பெறும் விவசாயிக்கான வேளாண்மைத்துறை சிறப்பு விருதினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கலை நிகழ்ச்சிகள்

பின்னர், மாணவ–மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும், பல்வேறு மாநிலங்களின் கலை மற்றும் பண்பாடுகளை பிரதிபலிக்கும் கண்கவர்

நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பல்வேறு பள்ளி கல்லூரி மாணவியர்களின் கிராமிய இசை நடனம், கரகாட்டம், கும்மி, பரதநாட்டியம், கோலாட்டம், தற்கால நடனம் ஆகியவற்றைத் தொடர்ந்து, கிராமிய கலைநிகழ்ச்சிகளான மிசோரத்தின் 'மூங்கில் நடனம்', குஜராத்தின் 'டாங்கி நடனம்', மத்திய பிரதேசத்தின் 'குடும்பஜா நடனம்', ஆந்திர பிரதேசத்தின் 'மாதுரி நடனம்', தமிழ்நாட்டின் 'பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், ஒயிலாட்டம்' ஆகியவைகளும் நடைபெற்றன.

அலங்கார ஊர்திகள்

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, தமிழக அரசின் துறைகள் சார்பாக அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெற்றது. இதில் 23 துறைகளின் சாதனைகளை வெளிப்படுத்தும் வண்ணம் அலங்கரிக்கப்பட்ட வாகனங்கள் அணிவகுத்து வந்தன. புதுவாழ்வு திட்டம் சார்பில் அணிவகுத்து வந்த வாகனத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் அழகுற வடிவமைக்கப்பட்டு இருந்தது அனைவரையும் கவர்ந்தது.

இறுதியாக காவல்துறையினரின் மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 7 மோட்டார் சைக்கிள்களில் 36 காவல்துறையினர் சாகசப் பயணமாக வந்தனர். நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவடைந்தது.

புதுவாழ்வு திட்டம் சார்பில் அணிவகுத்து வந்த வாகனத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் அழகுற வடிவமைக்கப்பட்டு இருந்தது அனைவரையும் கவர்ந்தது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் குடியரசு தின கொண்டாட்டம்

64வது குடியரசு தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்ற விழாவில் மேலாண்மை இயக்குநர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் முனைவர் ம. மனோகர சிங், திருமதி. மாதவி, செல்வி ராஜஸ்ரீ, புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குனர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா, பொதுமேலாளர் திருமதி. ஜி. லதா, இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

உடல் நலம்

மனித உடலின் முக்கியமான பகுதிகளான காது, மூக்கு, தொண்டை ஆகிய மூன்றிற்கும் ஏதேனும் பிரச்சனை என்றால் நாம் அலட்சியப்படுத்துகிறோம். மருத்துவரை அணுகாமல் தாங்களே சுய மருத்துவம் செய்து, நோயின் தன்மை சிக்கலாகிய பின்னர் மருத்துவரிடம் செல்கின்றனர். காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றில் சிறு பிரச்சனை என்றாலே, வழக்கத்திற்கு மாறான அடைப்பு, வலி போன்றவை தோன்றினாலோ உடனடியாக ஈ.என்.டி. மருத்துவரை அணுக வேண்டும்.

ஒரு மனிதனின் ஆரோக்கிய வாழ்விற்கு காது, மூக்கு, தொண்டை ஆகிய மூன்று உறுப்புகளும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. காதுகள் ஒலியைக் கேட்பதற்கு மட்டும்தான் பயன்படுகின்றன என நாம் நினைக்கக் கூடாது. காது வழியாக நாம் சப்தத்தைக் கேட்பதால்தான் பேச முடிகிறது. சப்தத்தை உணர்ந்து தான் குழந்தைகள் பேசவே ஆரம்பிக்கின்றன. பிறவியிலேயே காது கேளாமல் பிறக்கும் குழந்தைகள் பேசும் தன்மையை இழப்பதும் இதனால்தான்.



காது அடைப்பும் – காது வலியும்

ஒரு ஒலி ஏற்பட்டவுடன் அந்த சப்தம் காற்றில் பரவி நமது வெளிக்காது வழியாக உள்ளே நுழைந்து, காதுக்குள் உள்ள ஜவ்வை அசைக்கிறது. உடனே அந்த ஜவ்வானது நடுக்காதில் இருக்கும் மனித உடலின் மிகச்சிறிய எலும்புகளான இன்கஸ், மெல்லன்ஸ் மற்றும் ஸ்டெபெஸ் ஆகிய மூன்று எலும்புகளை அசைக்கிறது. ஸ்டேட்டஸ் எலும்பினால் அதிர்வு தரப்பட்டு உள் காதிலுள்ள திரவம் அசைவதால், செவி நரம்பு தூண்டப்பட்டு, அதிலிருந்து மின்சார பாய்ச்சல் மூலம் ஒலி நம் மூளையை அடைந்து, நம்மால் சப்தத்தை உணர முடிகிறது. நம் உள் காதுக்கும், வெளிக்காதுக்கும் இரண்டு பக்கமும் சரியான அழுத்தம் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் அழுத்தம் மாறினால் காது அடைச்சலும், வலியும் உண்டாகும்.

காது வலி மற்றும் அடைப்பு நீங்க...

விரல்களால் மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டு, வாயை மூடி முடிந்தளவிற்கு காற்றை வாயில் நிரப்பி, கன்னங்களை உப்பலாக்கி காது வழியாக காற்றை வெளியேற்ற முயல வேண்டும். அப்போது டப் என்ற சத்தத்துடன் காதுக்குள் இருக்கும் ஜவ்வானது சம நிலைக்கு வந்து, காது வலி, அடைப்பு போன்றவை குறையும்.

காதுகளை பாதுகாக்கும் வழிமுறைகள்

காதுக்குள் இயற்கையாகவே வாக்ஸ் என்கிற திரவம் சுரப்பதால் அழுக்குகள் தானே வெளியாகி விடும். எனவே காதுக்குள் குச்சி, பட்ஸ் போன்றவைகளை விட்டு சுத்தம் பண்ணுதல் கூடாது. நம் காதுகள் 80 முதல் 85 டெசிபல் வரைதான் சப்தத்தை தாக்கும் சக்தியுள்ளது என்பதால் அதற்கும் அதிகமான சப்தத்தை தவிர்ப்பது நல்லது.

சைனஸ், டான்சில், தாடை எலும்பில் பிரச்சனை என்றாலும், காது பாதிக்கும் என்பதால் இப்பிரச்சனைகளை உடனே கவனிக்க வேண்டும். சப்தம் குறைவான, இனிமையான பாடல்களைக் கேட்க வேண்டும். ஓடும் வண்டியிலிருந்து, ரேடியோ, டேப் போன்ற இரைச்சலான சப்தங்களைத் தவிர்க்க வேண்டும். தொடர்ந்து பல மணி நேரங்கள்

காது, மூக்கு, தொண்டை பாதுகாப்பு

செல்போனில் பேச வேண்டிய சூழ்நிலையில், ஒரு காதிலிருந்து மறு காதுக்கு போனை மாற்றி மாற்றி பேசுவது நல்லது.

மூக்கின் பயன்பாடு

மூக்கு நாம் சுவாசிக்கிற ஆக்சிஜனை நமது உடல் டெம்பரேச்சருக்கு தகுந்தவாறு மாற்றி நமது நுரையீரலுக்கு அனுப்புகிறது. கூடவே காற்றிலுள்ள நச்சுக் கிருமிகளை கொன்று நல்ல காற்றை உள்ளே அனுப்புகிறது.

மூக்கில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு முதல் உதவி

மூக்கினுள்ளே இரத்தக் குழாய் உடைந்தாலோ, மூக்குக்குள்ளே சதை வளர்ந்தாலோ, சைனஸ், உயர் இரத்த அழுத்தப் பிரச்சினையினாலோ மூக்கில் இரத்தம் வரலாம். அந்த சமயத்தில் மூக்கை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு வாய் வழியாக சிறிது நேரம் சுவாசித்தால் போதும், மூக்கில் ரத்தம் வடிவது நின்று விடும். அப்படியும் இரத்தம் வருவது நிற்கவில்லை எனில் மூக்கில் பஞ்சை அடைத்து தற்காலிகமாக இரத்தம் வருவதை நிறுத்தி விட்டு, உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

மூக்கைப் பாதுகாப்பது எப்படி?

மூக்கில் எந்தவித சொட்டு மருந்துகளையும் விடக்கூடாது. மூக்கை பலமாக சிந்துதல், விரலை விட்டுக் குடைதல், பொடி போடுதல், தும்மல் வருவதற்காக குச்சியை விடுதல், அசுத்தமான காற்றை சுவாசித்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

தொண்டைப் பராமரிப்பு

மனித உடலுக்கு மிகவும் பயனளிக்கும் ஒரு முக்கியமான பகுதி தொண்டையில் உள்ள டான்சில் உணவுக் குழாய்க்கு உணவையும், நுரையீரலுக்கு காற்றையும் அனுப்புவதற்கு வசதியாக, உணவு வரும்போதும், காற்றுச் செல்லும் போதும் மூடித் திறந்து அதனதன் வழியில் செல்ல உதவுவதுடன், நம் உடலுக்குள் செல்லும் தேவையில்லாத பொருட்களை தடுக்கும் பணியினையும் செய்கிறது.

தொண்டையில் ஏற்படும் பிரச்சனைகள்

நம் தொண்டையில் ஏற்படும் பிரச்சனை எனில் டான்சில் பிரச்சனைதான் முக்கியமானது. இதனால் தொண்டை வலி, தொண்டைக் கமறல் போன்றவை ஏற்படுகிறது.



தொண்டையைப் பாதுகாக்கும் முறைகள்

அதிக சூடான, குளிர்ச்சியான உணவுகளையும், குளிர்பானங்களையும் தவிர்க்க வேண்டும். சிகரெட், பான்பராக், பாக்கு போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது. சினிமா தியேட்டர், பஸ், இரயில் பயணங்களில் சாப்பிடக் கூடாது. நீண்ட நேரம் பேசுகிற சந்தர்ப்பங்களில் இடையிடையே தண்ணீர் அருந்த வேண்டும். கழுத்து நரம்புகள் புடைக்கும் அளவிற்கு சப்த மாகப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். ஒரு நாளைக்கு இருமுறையாவது பற்களை சுத்தம் செய்யுங்கள். உப்பு தண்ணீரில் வாய் கொப்பளிக்கக் கூடாது.

ஈ.என்.டி. சம்பந்தமாக தோன்றும் வேறு பிரச்சனைகள்

குறட்டை என்பதை ஒரு குறைபாடாகவோ, நோயாகவோ உணர மறுக்கின்றனர். ஈ.என்.டி. சம்பந்தமான பிரச்சனையால்தான் குறட்டை ஏற்படுகின்றது என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டோரில் பாதிக்கும் அதிகமானவர்கள் குறட்டையால் பாதிக்கப்பட்டவர்கள்தான். இந்த பட்டியலில் முப்பது விழுக்காடு பெண்களும் குறட்டை விடுபவர்களாக இருக்கிறார்கள்.

ஒருவர் தூக்கத்தில் குறட்டை விடுகிறார் என்றால், அவருக்கு மூக்கின் உள் பகுதியிலோ, தொண்டையிலிருந்து மார்புக்கு இடைப்பட்ட பகுதியிலோ அடைப்பு இருப்பதாக அர்த்தம். அதாவது மார்புக்கும், மூளைக்கும் சரியான விகிதத்தில் காற்று போகவில்லை என்று அர்த்தம். லேசான அளவில் குறட்டை விடும்போது பிரச்சனையில்லை. ஆனால், குறட்டையின் அளவு அதிகரிக்கும்போது அது ஒரு நோயாகி விடும்.

டான்சில் மிகவும் பாதிக்கப்பட்டால் அது சிறுநீரகத்தையும், இதயத்தையும் பாதிக்கக் கூடும். அதனால், டான்சில் பிரச்சனை என்று தெரிந்தவுடன் சிகிச்சை ஆரம்பித்து விடுவது நல்லது. அதிலும் குழந்தைகளுக்கு ஏற்படும் டான்சில் பிரச்சனையை முற்ற விடாமல் உடனே மருத்துவரை அணுகி சிகிச்சையின் மூலம் சரி செய்ய வேண்டும்.

யாருக்கெல்லாம் குறட்டை பிரச்சனை வரும்?

அதிகப்படியான உடல் எடையுள்ளவர்களுக்கும், மூக்குத் தண்டிலும், உள்நாக்கு, மற்றும் தொண்டைப் பகுதியிலும் பிரச்சனை உள்ளவர்களுக்கும் இயல்பிலேயே தாடை எலும்பு சற்றே அமுங்கிய நிலையிலிருப்பவர்களுக்கும், கழுத்துப் பகுதியில் அதிகமான சதையுள்ளவர்களுக்கும், சைனஸ் தொந்தரவு உள்ளவர்களுக்கும் குறட்டை பிரச்சனையுண்டாகும்.

குறட்டை எப்படி உண்டாகிறத?

இயல்பாகவே நாம் தூங்குகிறபோது தொண்டைச் சதையும், மூக்கின் பின்பகுதிச் சதையும் ஓய்வு நிலையை அடைவதால், காற்றுச் செல்லும் டியூப்பின் அளவு குறையும். அந்தச் சமயத்தில் மூளைக்கும், மார்புக்கும் செல்கிற காற்றின் வேகம் சற்றே அழுத்த மாகவும், வேகமாகவும் இருக்கும். காற்றுச் செல்லும் பாதையில் அடைப்பு இருந்தால், அளவு குறைந்த டியூப்பின் வழியே காற்று செல்கிற போது, அதிர்வு ஏற்பட்டு குறட்டை சத்தம் எழுகிறது. ■

பெண்களைக் காக்கும் சட்டங்கள்

பெண்களுக்கு எதிரான சைபர் கிரைம் குற்றங்கள்



நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெண்களுக்கு எதிராக குற்றம் புரிபவர்களைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுப்பதற்காக, சென்னை காவல்துறையில் ‘சைபர் கிரைம் பிரிவு’ இயங்கி வருகிறது. 2003ம் ஆண்டு இந்த பிரிவு தொடங்கப்பட்டபோது மிகக்குறைவான அளவிலேயே புகார்கள் பதிவாயின. தற்போது ஆண்டுதோறும் புகார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வருடத்திற்கு வருடம் சைபர் கிரைம் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது போல் தோன்றினாலும், வேகமாக உயர்ந்து கொண்டிருக்கும் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையோடு அதை ஒப்பிட்டால் குற்றங்களின் எண்ணிக்கை குறைவுதான் என்பது சற்று ஆறுதலான விஷயம். எனினும் இதையும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உத்வேகத்துடன் சைபர் கிரைம் பிரிவு செயல்பட்டு வருகிறது.

மிரட்டல், ஆபாச படம் பிடித்தல், அவைகளை இணையதளத்தில் வெளியிடுதல் போன்றவை குறித்தே சைபர் கிரைம் பிரிவில் குற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதில் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் பெண்களே. ஆணும், பெண்ணும் நட்போடு பழகிக் கொண்டிருக்கும் போது, தங்களை படம் எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குள் பிரச்சனை ஏற்படும்போது அந்த படங்களை பயன்படுத்தி இணையதளங்களில் தவறாக சித்தரிக்கிறார்கள். ஆபாச படங்களை வெளியிடுவதும், தவறாக சித்தரிப்பதும் கடுமையான குற்றங்களாகும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெண்களுக்கு எதிராக குற்றம் புரிபவர்களைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுப்பதற்காக, சென்னை காவல்துறையில் ‘சைபர் கிரைம் பிரிவு’ இயங்கி வருகிறது. 2003ம் ஆண்டு இந்த பிரிவு தொடங்கப்பட்டபோது மிகக்குறைவான அளவிலேயே புகார்கள் பதிவாயின.

விளையாட்டாக படம் பிடிப்பது, பொழுதுபோக்காக அடுத்தவர் களை படம் பிடிப்பது எல்லாமே எதிர்காலத்தில் பிரச்சனைகளை உருவாக்கும் தன்மையைக் கொண்டது என்பதால், எப்போதும் எல்லோரும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஒருவர் கெட்ட நோக்கமின்றி இன்னொருவரின் தனிப்பட்ட படங்களை எடுத்தாலும், வைத்திருந்தாலும் அது மற்றொருவரின் கையில் கிடைக்கும்போது அது பிரச்சனைக்குரியதாக மாறக்கூடும். அதனால் அடுத்தவர்களின் தனிப்பட்ட விஷயங்களை ஒருபோதும் யாரும் படம் பிடிக்கக்கூடாது. குறிப்பாக பெண்கள் இந்த விசயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

சைபர் கிரைம் குற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை மக்கள் உணர வேண்டும். சென்னையில் இத்தகைய பாதிப்புற்கு உள்ளாகிறவர்கள் காவல் துறை ஆணையர் அலுவலகத்தில் உள்ள குறைகேட்புப் பிரிவில் புகார் செய்ய வேண்டும். புகாரின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெரும்பாலும் பெண்களைக் குறிவைத்தே சைபர் கிரைம் குற்றங்கள் நடைபெறுவதால் பெண்கள் இது குறித்து மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். பாதிக்கப்படும் பெண்கள் உடனடியாக தங்கள் பகுதியில் இருக்கும் காவல் நிலையத்தில் புகார் அளிக்க முன் வர வேண்டும்.

இரும்புக் கரம் கொண்டு ஈவ்டீசிங் குற்றங்களை ஒடுக்க அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு! ஈவ் டீசிங்கை தடுக்க உச்சநீதி மன்றத்தின் வழிகாட்டு நெறிகள்

சில ஆண்டுகளுக்கு முன்னர் தென்காசியைச் சேர்ந்த காவலர் ஒருவர், பேருந்து நிலையத்தில் நின்றிருந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றார். இதன் காரணமாக அவர் மீது ஈவ்டீசிங் குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டு அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார். இதன் மீதான மேல்முறையீட்டில், அவரை பணி நீக்கம் செய்யப்பட்டதை உறுதி செய்து மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இத்தீர்ப்பை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு. கே. ராதாகிருஷ்ணன், திரு தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, காவலரை பணிநீக்கம் செய்யப்பட்டதை உறுதி செய்து தீர்ப்பளித்தது.

மேலும் நீதிபதிகள் குறிப்பிடும்போது, ‘பணி இடங்களில் பிற ஆடவர்களால் ஏற்படும் பாலியல் தொல்லையில் இருந்து பெண்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் வகையில் ‘பணி இடங்களில் பாலியல் வன்முறைக்கு எதிரான பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 2010’ என்ற சட்டத்தை இந்திய பாராளுமன்றம் இயற்றியுள்ளது. ஆனால் ஈவ்டீசிங்கிற்கு ஆளாகும் பெண்களுக்கு இச்சட்டம் போது மான பாதுகாப்பை தரவில்லை. எனவே தற்போது ஈவ்டீசிங் தொல்லைகளில் இருந்து பெண்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டியது தற்போது அவசியமாகிறது. தமிழகத்தில் 1998ஆம் ஆண்டு ஈவ்டீசிங் காரணமாக கல்லூரி மாணவி ஒருவர் உயிர் இழந்ததன் விளைவாக தமிழக அரசு ‘ஈவ்டீசிங் தொல்லையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 1998’ என்ற சட்டத்தை இயற்றியது’ என்று நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். ■

ஈவ்டீசிங் கொடுமையை தடுக்கும் வகையில் உச்சநீதி மன்றம் வெளியிட்டுள்ள பல்வேறு வழிகாட்டுதல் நெறிமுறைகளின் விவரம் பின் வருமாறு

ஈவ் டீசிங்கைத் தடுக்க சரியான சட்டம் கொண்டு வருவது அவசர அவசியமாகும். கூட்ட நெரிசல் மிகுந்த ரயில்கள் மற்றும் பஸ்களில் பெண்கள் சந்திக்கும் கசப்பான அனுபவங்கள் ஏராளம்.

சிறிய அளவிலான முயற்சிகள் மூலமே ஈவ்டீசிங் கொடுமையை தடுக்க முடியும். ஆனால், அதைத் தடுக்காவிட்டால் அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும். ஏனெனில் ஈவ்டீசிங் என்பது பாலியல் துன்புறுத்தல் போல் அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு எதிரானதாகும்.

சில நேரங்களில் ஈவ்டீசிங்கால் பாதிக்கப் பட்ட பெண்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டு, தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள நகரங்களில் பெண்கள் உதவி மையங்கள் அமைத்து, ஈவ்டீசிங்கை தடுக்கும் நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், பூங்காக்கள், கடற்கரைகள், பொதுச் சேவை வாகனங்கள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் சீருடை அணியாத பெண் போலீஸாரை ஈடுபடுத்த அனைத்து மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் உத்திரவிடப்படுகிறது. முக்கியமான இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை நிறுவ அரசுகள் முன்வர வேண்டும். இதுவே பெரிய ஈவ்டீசிங் தடுப்பு நடவடிக்கையாக அமையும்.

கல்வி நிலையங்கள், ரயில் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களின் பொறுப்பாளர்களே ஈவ்டீசிங்கைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இது தொடர்பாக ஏதாவது புகார் வந்தால் அவர்கள் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது பெண்கள் உதவி மையத்திலோ அதைப் பதிவு செய்ய வேண்டும். ஈவ்டீசிங் கொடுமையைத் தடுக்க நாடு முழுவதும் ஒரே சீரான சட்டம் இல்லாததால், இந்த விதிமுறைகள் அவசியம் என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

குறுக்கெழுத்துப் போட்டி

முற்றம் இதழில் குறுக்கெழுத்துப் போட்டி, ஓவியப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொது அறிவு குறித்த கேள்வி பதில் போன்ற பல்வேறு போட்டிகள் இனி மாதந்தோறும் வெளியாக உள்ளன. இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வாசகர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுகிறது. எனவே முற்றம் வாசகர்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

1) ம				தி			10) பி	12) ம	க்
	2) பெ		னி			க்			
		4)	ரு		து				ம்
ட	7					11) நோ	டி	ர்	
		வோ		க	6)				
	ப				து	9)		ட்	
டை	ம்			மா		இ 5)			14) பா
தி		3)			ற				
	13)			னை			7)		று
			ய		8)			16) ம	15)

வலமிருந்து இடம்

1. மார்ச் 8
2. ஜனவரி 15ல் இவருக்கு மணி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது
3. தை மாதத்தின் சிறப்பை குறிக்கும் பழமொழி – ஒரு பகுதி மட்டும் உள்ளது
4. இயேசு பிரான் பிறந்த தினம்

இடமிருந்து வலம்

5. இந்தியாவின் கணித மேதை
6. பொருளை பயன்படுத்துபவர்
7. கிருஸ்துமஸ் / புத்தாண்டு / பொங்கல்
8. இந்தியா ஒரு .... ஆகும்
9. .... திட்டம் கிராமப்புற மக்களுக்கு வளம் தரும் திட்டம்

மேலிருந்து கீழ்

10. ....மறு சுழற்சி மையம்
11. மார்கழி மாதத்தில் பெண்கள் மார்கழி....... இருப்பார்கள்
12. பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவுவது

கீழிருந்து மேல்

13. கொடி நாள் கொண்டாடப்படுவது
14. மாற்றுத் திறனாளிகளுக்கு நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டி
15. கிராம .... ஒழிப்பு சங்கம்
16. மகளிர் திட்டத்தை குறிப்பது....

முதல் பரிசு 250 ரூபாய் ஒருவருக்கும், இரண்டாம் பரிசு 150 ரூபாய் ஒருவருக்கும், மூன்றாம் பரிசு 100 ரூபாய் ஒருவருக்கும் வழங்கப்படும். குறுக்கெழுத்துப் போட்டிக்கான வினாக்களுக்கு உரிய விடைகள் 2012 டிசம்பர் மற்றும் 2013 ஜனவரி ஆகிய மாதங்களின் முற்றம் இதழில் இடம் பெற்றுள்ள செய்திகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

விடைகளை இன்லாண்டு கடிதத்திலோ அல்லது அஞ்சல் உறையிலோ எழுதி, உங்களது முழு முகவரி மற்றும் பின்கோடு எண், செல்போன் எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு கீழ்கண்ட முகவரியை கத்தரித்து ஒட்டி, 10.03.2013க்குள் எங்களுக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறோம்.

குறுக்கெழுத்துப் போட்டி – 1
முற்றம் மாத இதழ்
அன்னை தெரசா மகளிர் வளாகம்
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

புதுவாழ்வு திட்ட அரங்கில்
உலக வங்கிகுழுவினர்

அனைத்துத் தரப்பினரையும் கவரும் பொழுதுபோக்கு அம்சங்களும், பல்வேறு அரசுத் துறைகளின் சாதனை விளக்க அரங்குகளும், தரமான பொருட்களை விற்பனை செய்யும் கடைகளும் நிறைந்துள்ளதால் இப்பொருட்காட்சிக்கு மக்கள் குடும்பம் குடும்பமாக வருகை தந்து மகிழ்ச்சியுடன் பொழுதை களிப்பதுடன், அங்கு அமைக்கப்பட்டிருக்கும் விற்பனை அரங்குகளில் தங்களுக்குத் தேவையானப் பொருட்களையும் வாங்கிச் செல்கின்றனர்.

சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் 39வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள், புதுவாழ்வுத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்த விபரங்கள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள் குறித்த விளக்கப்படங்கள், செய்திகள் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த விபரங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த அரங்கினை சமீபத்தில் உலக வங்கிக் குழுவினர் மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரும், புதுவாழ்வு திட்ட இயக்குநருமான திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., ஆகியோர்பார்வையிட்டன்.ர மற்றும் பார்வையிட்டனர். ■

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவை கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி, அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன் காரணமாக தற்போது கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கை வளமாகி வருகிறது.

புதிய வாய்ப்பு தந்த புதுவாழ்வு திட்டம்

வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியம், மாம்பாக்கம் களப்பகுதியில் உள்ள இருங்கூர் ஊராட்சியில் வசிக்கும் எனது பெயர் சுதாகரன், நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படிப்பு படிக்க இயலாத நிலையில் இருங்கூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் இந்தியன் வங்கி அளிக்கும் இலவச செல்போன் அசெம்பிளி பயிற்சிக்கு அனுப்பினார்கள். பயிற்சி முடித்தவுடன் அந்நிறுவனத்திலேயே பயிற்றுனராக நியமனம் செய்யப்பட்டேன். மேலும் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் கலவை களப்பகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கான செல்போன் பழுது பார்க்கும் பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டதில் பயிற்சி அளிக்கும் பயிற்றுனராக பணியாற்றும் வாய்ப்பு எங்கள் நிறுவனத்தின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டது. தற்போது மாதம் ரூ. 10 ஆயிரம் வரை சம்பளம் பெறுகிறேன்.

– சுதாகரன், இருங்கூர்

பயனுள்ள தொழிற்பயிற்சி அளித்து என் வாழ்க்கை தரத்தை உயர்த்திய எங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும், புதுவாழ்வு திட்டத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில் செய்து வாழ வழிகாட்டிய புதுவாழ்வு திட்டம்

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், வளையாம்பட்டி ஊராட்சியில் உள்ள இலக்கு மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த செல்வி, தனது குடும்பத்தின் வறுமை காரணமாக எந்த குழுவிலும் உறுப்பினராக இல்லை. இக்கிராமத்திற்கு புதுவாழ்வுத் திட்டம் வந்த பிறகு சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்க்கப்பட்டார். பின்னர் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் இணைந்து சிறு தொழில் செய்ய ரூ. 10 ஆயிரம் பெற்று, இனிப்பு மற்றும் கார மாங்காய் ஊறுகாய்களை தயார் செய்து சிறுபாக்கெட்டில் தயார் செய்து கடைகளில் விற்பனை செய்து வருகிறார். இதன் மூலம் மாதம் ரூ. 4000/– வீதம் வருவாய் பெற்று வரும் இவர் தற்போது தனது மூன்று பிள்ளைகளையும் படிக்க வைக்கிறார். குறைவான முதலீட்டில் சிறுதொழில்

செய்து நிறைவான வாழ்வு வாழ வழிகாட்டிய புதுவாழ்வு திட்டத்திற்கும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறார் திருமதி செல்வி. ■

நால்வருக்கு கிடைத்த நல் வாழ்வு

வேலூர் மாவட்டம், கென்னடிகுப்பம் ஊராட்சியில் வசித்து வரும் குமாரும் அவரது சகோதரர்கள் 3 பேரும் வாய் பேச முடியாத மற்றும் காதுகேளாத மாற்றுத் திறனாளிகள். இவர்களைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு புதுவாழ்வு திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் தனிநபர் தொழில் செய்ய கடனுதவி, பெற்று ஒவ்வொருவரும் தனித்தனியே தொழில் செய்து வருவாய் பெற்று வருகின்றனர். ■

மாநில நுண்நிதி வல்லுநர் ஆய்வு

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், வளையாம்பட்டு களப்பகுதி செட்டியப்பனூர் ஊராட்சியில் புதுவாழ்வு திட்ட மாநில அலுவலகத்திலிருந்து திரு அருள்மொழிச்செல்வன் (மாநில நுண்நிதி வல்லுநர்) வருகை புரிந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சமூக தணிக்கைக் குழு ஆகிய மக்கள் அமைப்புகளை ஆய்வு செய்ததோடு, சுய உதவிக் குழு கூட்டத்திலும் பங்கேற்று உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் செய்தார். இந்தக் கலந்துரையாடலில் புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள், மகமையின் செயல்பாடுகள், வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள், தொழிற்பயிற்சிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வழங்கப்படும் உதவி திட்டங்கள், தொழிற்குழுக்களின் செயல்பாடுகள் போன்றவை குறித்து விவாதிக்கப்பட்டு, தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ■

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவை கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி, அவர்களின் வாழ்வில் ம ாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவழிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன் காரணமாக தற்போது கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கை வளமாகி வருகிறது.
ஈடுபட்டு வருகின்றன. இதன் காரணமாக தற்போது கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கை வளமாகி வருகிறது.

வாழ வழிகாட்டிய புதுவாழ்வு திட்டம்

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்காயம் களப்பகுதி, வெள்ளக்குட்டை ஊராட்சியின் வெள்ளக்குட்டை குடியிருப்பில் வசித்து வருபவர் முனியம்மாள். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த இவரின் குடும்பத்தில் மொத்தம் 4 நபர்கள் உள்ளனர். இவரது கணவரின் வருவாய் நாள் ஒன்றுக்கு ரூ. 150/– மட்டுமே. இது இவர்களின் குடும்பத்திற்கு போதுமானதாக இல்லாததால், முனியம்மாளும் வேலைக்குச் செல்ல தீர்மானித்தார்.

வெள்ளக்குட்டை பகுதியில் புதுவாழ்வுத் திட்டம் செயல்பட்டு வருவதையும், அத்திட்டத்தின் மூலம் ஏழையாக இருக்கும் மகளிரைக் கொண்டு மகளிர் குழுக்கள் அமைப்பதையும், கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களின் வாயிலாக அறிந்து கொண்ட முனியம்மாள் தன்னையும் ஒரு குழுவில் இணைத்துக் கொண்டு, இயன்றவரை சேமிக்கத் தொடங்கினார். குழுவிலிருந்து உள்கடனாக ரூ. 1500/– பெற்று பயன்படுத்திக் கொண்டார்.

வாராவாரம் சேமிப்பு, சந்தா, உள்கடன் ஆகியவற்றை தவறாமல் செலுத்தி வந்த நிலையில் குழுவின் மூலம் வெள்ளக்குட்டை ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் இருந்து அமுதசுரபி நிதியில் காய்கறி வியாபாரம் செய்ய கடன் உதவி பெற்றுத் தந்தனர். சொந்தமாக கடை வைத்து, அயராமல் உழைத்த முனியம்மாள், கிடைத்த வருவாயில் கடன் தொகை முழுவதையும் திரும்பச் செலுத்தி விட்டதுடன், தற்போது மாதம் ரூ. 5000/– வரை வருவாய் பெற்று குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்.

புதுவாழ்வு திட்டத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் கூட்டமைப்பிற்கும், திட்டப் பணியாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார் முனியம்மாள். ■

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியம், கலவை களப்பகுதியில் உள்ள அல்லாளச்சேரி, நாகலேரி மற்றும் பரிக்கல்பட்டு ஆகிய 3 ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் இணைந்து, அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இரத்த சோகை கண்டறியும் முகாமினை அல்லாளச்சேரியில் நடத்தின. இம்முகாமினை அல்லாளச்சேரி நாகலேரி மற்றும் பரிக்கல்பட்டு ஆகிய ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் துவக்கி வைத்தனர். கலவை களப்பகுதி யின் திட்ட ஒருங்கிணைப்பு அணியினர் வழிநடத்தினர். இதில் 3 ஊராட்சிகளிலிருந்தும் ஏராளமான மகளிர் மற்றும் கர்ப்பிணிகள் கலந்து கொண்டு இரத்த பரிசோதனை செய்து கொண்டனர். இரத்த சோகை நோய் குறித்தும், அதனை தடுப்பதற்கான சத்தான உணவு முறைகள் குறித்தும் வளையாத்தூர் சமுதாய சுகாதார நிலைய மருத்துவர் டாக்டர் கோ. சுரேஷ்பாபு விளக்கமளித்தார். வளையாத்தூர் சுகாதார நிலைய செவிலியர்கள் மற்றும் இரத்த பரிசோதகர்கள் முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு இரத்த பரிசோதனை செய்தனர். ■

மாநில அளவிலான திட்ட அறிமுகப் பயிற்சி

வேலூர் மக்கள் கற்றல் மையம் மூலமாக புதிதாக பணியில் சேர்ந்துள்ள திட்ட பணியாளர்களுக்கு மாநில அளவிலான திட்ட வழிகாட்டி பயிற்சி எஸ். வி. நகரத்தில் உள்ள மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி மையத்தில் நடைபெற்றது. மாவட்ட திட்ட மேலாளர் திருமதி சிவகாமி ஸ்ரீகிருஷ்ணா, மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி மைய முதல்வர் திருமதி ராஜம் ஆகியோர் குத்துவிளக்கேற்றி பயிற்சியை துவக்கி வைத்தனர். வேலூர் மக்கள் கற்றல் மையத்தின் மூலம் நான்கு அணியாக திட்ட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ■

தணிக்கை குறித்த விளக்கக் கூட்டம்

வேலூர் மாவட்ட புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள மக்கள் அமைப்புகளாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு ஆகியவற்றின் 2011–12ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது. தணிக்கை பற்றிய கலந்தாய்வுக் கூட்டம் உதவித் திட்ட மேலாளர் (கிராம நிதி) அவர்களால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது. இதில் சென்னை அசோசியேட் பட்டயக் கணக்காளர் குழுவினைச் சேர்ந்த திரு உதயக்குமார், கணக்கு மற்றும் கண்காணிப்பு ஒருங்கிணைப்பாளர்கள், மக்கள் அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் கணக்காளர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் தணிக்கையின் போது பராமரிக்க வேண்டிய பதிவேடுகள், ரசீதுகள் மற்றும் கோப்புகள் குறித்தும் பட்டயக் கணக்காளர் குழுவினரால் விளக்கப்பட்டது.

வாழ வழிகாட்டிய புதுவாழ்வு திட்டம்

என் பெயர் சென்றாயன், மாற்றுத் திறனாளியான நான், வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்காயம் களப்பகுதி வள்ளிப்பட்டு ஊராட்சியின் வள்ளிப்பட்டு குடியிருப்பில் வசித்து வருகிறேன். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த எங்கள் குடும்பத்தில் என் அப்பா கல் உடைக்கும் வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் குறைவான கூலியில் குடும்பத்தை நடத்தி வந்தார். எனது தாயார் உடல்நிலை சரியில்லாதவர் எனவே வீட்டில் இருக்கிறார். எனது தந்தையார் பெறும் கூலி எங்களின் குடும்பத்தின் வறுமையை நீக்க போதுமானதாக இல்லை. மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தோம். இந்நிலையில் எங்கள் பகுதி யில் புதுவாழ்வுத் திட்டம் செயல்படத் தொடங்கியது. அதன் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான முகாமில் கலந்து கொண்ட எனக்கு தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட உதவிகளைப் பெற்றேன்.

எங்கள் பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் நேரு மாற்றுத் திறனாளிகள் குழுவில் உறுப்பினராக சேர்ந்த நான், சேமிப்பு, சந்தா போன்றவற்றை நல்லமுறையில் செலுத்தி வந்தேன். இந்நிலையில் எங்களது கிராமத்தில் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு தொடங்கப்பட்டு, அதில் எங்கள் குழுவும் உறுப்பினராக சேர்க்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் பிரிவில் நான் வங்கியில் ரூ. 20 ஆயிரம் கடன் பெற்று, எங்கள் கிராமத்திலேயே சிக்கன் – மீன் கபாப் கடை வைத்துள்ளேன். இதன் மூலம் மாதம் ஒன்றிற்கு ரூ. 6 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானம் எங்கள் குடும்பத்தி ன் வறுமையை போக்கி, தற்போது எனது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்தி வருகிறேன்.

எனது வாழ்க்கைக்கு வழி வகுத்துத் தந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும், மகளிர் குழு கூட்டமைப்பிற்கும் குறிப்பாக எனக்கு ஒத்துழைப்பு நல்கிய எனது குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், திட்ட பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ■

> மாற்றுத் திறனாளிகள் பிரிவில் நான் வங்கியில் ரூ. 20 ஆயிரம் கடன் பெற்று, எங்கள் கிராமத்திலேயே சிக்கன் – மீன் கபாப் கடை வைத்துள்ளேன். இதன் மூலம் மாதம் ஒன்றிற்கு ரூ. 6 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானம் எங்கள் குடும்பத்தின் வறுமையை போக்கி, தற்போது எனது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்தி வருகிறேன்.

மகமை கலந்தாய்வு கருத்தரங்கு

வேலூர் மக்கள் கற்றல் மையத்தில் மாநில அளவிலான மக்கள் கற்றல் மைய கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி ஆர். வி. ஷஜீவனா அவர்கள் கலந்து கொண்டு மக்கள் கற்றல் மையத்தின் மூலம் முடிவுற்ற பணிகள், முடிக்கப்பட வேண்டிய பணிகள் மற்றும் சிறப்பு செயல்பாடுகள் குறித்து மாவட்ட வாரியாக கலந்தாய்வு செய்தார். இதில் மாவட்ட திட்ட மேலாளர் திருமதி சிவகாமி ஸ்ரீகிருஷ்ணா அவர்களும், 15 மாவட்டங்களின் உதவித் திட்ட மேலாளர்களும் மக்கள் கற்றல் மையத்தின் நிர்வாகிகளும் கலந்து கொண்டு மக்கள் கற்றல் மையத்தின் செயல்பாடுகள் குறித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

ஆடை அலங்கரிப்பு பணியில் பிஸ்மில்லா குழு

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், வளையாம்பட்டு ஊராட்சி உமர் நகரில் வசித்து வரும் என் பெயர் அஜிமுனிசா. எங்கள் பகுதியில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட இலக்கு மக்கள் குழுக்களில் எங்கள் பிஸ்மில்லா மகளிர் சுய உதவிக் குழுவும் ஒன்றாகும். எங்கள் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் ரூ. 1,50,000/– கடன் பெற்று, ஆரியா தொழில் குழுவாக அமைத்து, ஆடைகளில் பூவேலைபாடுகள் செய்து வருகிறோம். இதன் மூலம் கடன் திருப்பம் போக மாத ரூ. 15,000/– வரை இலாபம் கிடைக்கிறது. இத்தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்த புதுவாழ்வு திட்டத்திற்கு எங்களது குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. ■

குழுவில் இணைந்திடுவீர் கூட்டுத் தொழில் புரிந்திடுவீர்

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஒன்றியம், மேல்பட்டி களப்பகுதியில் உள்ள ஊராட்சிதான் பல்லாலக்குப்பம். தென்னை மரங்கள் அதிகம் உள்ள இவ்வூராட்சியில் உள்ள செவ்வந்தி மகளிர் குழு தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தென்னந்தோப்பை குத்தகைக்கு எடுத்து தேங்காய், மட்டை, தென்னங்கீற்று ஆகியவற்றை விற்பனை செய்ய முடிவு செய்தது. முதலீட்டிற்காக புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மறுசீரமைப்பு செய்து செயல்பட்டுவரும் பல்லாலக்குப்பம் ஊராட்சி கூட்டமைப்பின் உதவியுடன் தொழில் கடனாக ரூபாய் மூன்று லட்சம் பெற்று தற்போது தொழில் செய்து வருகிறது. தொழிலில் கிடைத்த லாபத்தைக் கொண்டு கடனை முழுமையாக திரும்ப செலுத்திவிட்டு, தற்பொழுது அந்த குழுவின் உறுப்பினர்கள் தங்கள் வாழ்வில் பொருளாதார உயர்வை அடைந்துள்ளனர். ■

முற்றம் படி!
அதுவே
வெற்றியின்
முதல்படி!!

சந்தாக் கட்டணம்

1 ஆண்டு சந்தா	ரூ. 100/–
2 ஆண்டு சந்தா	ரூ. 150/–
3 ஆண்டு சந்தா	ரூ. 250/–
4 ஆண்டு சந்தா	ரூ. 300/–
ஆயுள் சந்தா	ரூ. 600/–
புரவலர் கட்டணம்	ரூ. 15,000/–

விளம்பரக் கட்டணம் (வண்ணத்தில்)

பின் அட்டை	ரூ. 25,000/–
அட்டை இரண்டாம் பக்கம்	ரூ. 20.000/–
அட்டை மூன்றாம் பக்கம்	ரூ. 20,000/–
உள்பக்கம்	ரூ. 20,000/–
அரைப் பக்கம்	ரூ. 10,000/–
கால் பக்கம்	ரூ. 5,000/–

(விளம்பரக் கட்டணத்தில் சலுகை உண்டு)

புதிய
பகுதிகளுடன்
புதுப்
பொலிவுடன்
உங்கள்
முற்றம்

'முற்றம்' மகளிர் மாத இதழ்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
அன்னை தெரசா மகளிர் வளாகம், முதல் மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 28173413
தொலைநகல் : 044 – 28173409
wdcmutram@gmail.com
wdcmutram@yahoo.com
www.tamilnaduwomen.net/mutram.

பெருங்கடன் வழங்கும் விழா

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வார இயக்கம் தொடர்பான திட்ட விளக்க கருத்தரங்கு 14.02.2013 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வார இயக்கம் குறித்தும், அதன் செயல்பாடுகளுக்கு அனைத்துத் துறையினரின் ஒத்துழைப்புக் குறித்தும் விளக்கமளித்தார்கள்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குனர் முனைவர் ம. மனோகரசிங், புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., நாகை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. சங்கர் மற்றும் மகளிர் திட்ட அலுவலர், புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர், வட்டார வளர்ச்சி அலவலர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் நாகை மாவட்டம், குத்தாலம் வட்டாரம், கோடிமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு மேலாண்மை இயக்குநர் முன்னிலையில் இந்தியன் ஓவர்சீஸ், கோடிமங்கலம் கிளையின் மூலம் ரூ. 12.70 இலட்சம் பெருங்கடனாக வழங்கப்பட்டது.

ஏழை மக்களை முன்னேற்ற வந்த திட்டம் புதுவாழ்வு திட்டம்

சுவாசக்குழாயில் ஏற்படும் கிருமித்தொற்றால் 13% குழந்தைகளும், 1.5% பெண்களும் உயிரிழக்கின்றனர். உட்புற காற்று மாசினால் ஏற்படும் இறப்புகளில் 28% இந்தியாவில் ஏற்படுகிறது.

உட்புற காற்று மாசுபடுதல் ஒரு உயிர் கொல்லி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஊரக பகுதிகளில் உயிரி எரிபொருட்களின் (விறகு மற்றும் சாணம்) பயன்பாடு

இந்தியாவில் இன்றும் சுமார் 85 விழுக்காடு கிராமப்புற குடும்பங்கள் சமைப்பதற்கு உயிரி எரிபொருட்களான விறகுகள், விவசாய கழிவுகள் மற்றும் சாணத்திலான வரட்டிகளையே பயன்படுத்துகின்றனர். அதாவது 62.5% குடும்பங்களில் விறகுகள் பயன்படுத்தப்படுகின்றன; 12.3% குடும்பங்களில் விவசாய கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன; 10.9% குடும்பங்களில் சாண வரட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. உட்புற காற்று மாசினால் ஆண்டிற்கு 4,88,200 பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவிக்கிறது.

மண்ணால் உருவாக்கப்படும் சாதாரண அடுப்புகளில் உயிரி எரிபொருட்களை எரிக்கும்போது ஏற்படும் புகையினால் உடல் நலக்குறைவுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

உயிரி எரிபொருட்களை சேகரிப்பதிலும், வாங்குவதிலும் கீழ்காணும் குறைபாடுகள் உள்ளன. கிராமாப்புற பெண்கள் சராசரியாக தினமும் 20 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை விறகு சேகரிக்க செலவிடுகின்றனர். சந்தைகளில் வாங்கும் போது விறகின் விலை ஒரு கிலோவிற்கு ரூ. 2 முதல் ரூ. 4 வரை செலவாகிறது. ஆக மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வரை செலவாகிறது. விவசாயத்தில் உரம ாக பயன்படுத்தப்பட வேண்டிய சாணம் 73 மில்லியன் டன் அளவிற்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

தெரிந்து கொள்க

சாதாரண அடுப்புகளில் சமைக்கும் போது உண்டாகும் புகையானது 400 சிகரெட்டுகளில் வெளியாகும் புகையில் உள்ள நச்சு பொருட்களுக்கு சமமாகும். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (77,400 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

எச்.ஐ.வி இருந்தா எப்பவும் தெளிவா இருக்கணும்!

- எச்.ஐ.வி உள்ள ஒவ்வொருவரும் எப்போதும் பாதுகாப்பைக் கடைப்பிடிப்பீர்.
- மற்றவர்களிடம் இருக்கும் எச்.ஐ.வி தொற்று தன்னிடம் வராமல் தடுத்துக்கொள்வீர்.
- சந்தர்ப்பவாத நோய்கள் வராமல் நலவாழ்வு முறைகளைக் கடைப்பிடிப்பீர்.
- நடத்தையில் நல் மாற்றத்துடன், பாதுகாப்பான வாழ்வை பழக்கபடுத்திக்கொள்வீர்.

மேலும் விபரங்களுக்கு

1800 419 1800

(கட்டணம் இல்லை)

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-08.
தொலைபேசி: 044-2819 0467 / 2819 0891, வலைதளம்: www.tansacs.in

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 21.02.2013

சுய உதவிக் குழு பயிற்சி

சேமிப்பு மற்றும் கணக்குப் பதிவேடு பராமரிப்பு

தர மதிப்பீடு

வங்கிக் கடன் இணைப்பு

நிதி மேலாண்மை

- ஏழைகளுக்கும் மகளிருக்கும் முன்னுரிமை அளிப்போம்
- வலுவான மக்கள் அமைப்புகளை உருவாக்கிடுவோம்
- மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோருக்கு உறுதுணையாக இருப்போம்
- அனைவரும் ஒன்றுகூடி முடிவெடுத்து செயல்படுவோம்
- ஏழை மக்களின் வளர்ச்சியில் அவர்களின் பங்கையும், சமுதாயத்தின் பங்கினையும் உறுதி செய்வோம்
- நாணயமான செயல்பாடு மற்றும் வெளிப்படையான நிர்வாகம் செய்திடுவோம்
- வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக்கும், கிராம வளர்ச்சிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்

www.tamilnaduwomen.net

“எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும், எங்கள் கையில் என சங்கே முழங்கு!”

ஆஜீவிகா AAJEEVIKA

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034. தொலைபேசி: 044-2817 3412 / 3413